பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 18 வெள்ளிக்கிழமை 31.05.2024 கதிர் 205

## அரச மருத்துவத் துறையில் போதிய மருத்துவர்கள் இன்றி நெருக்கடி

### மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு

மருத்துவமனைகளிற்கு நியமிக்கப்படும் மருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்காததால் நாட்டின் மருத்துவதுறையில் பெரும் நெருக்கடி உருவாகியுள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடக பேச்சாளர் வைத்தியர் சமால் விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உரிய தரப்பினர் நாட்டின் மருத்துவ அமைப்பிற்கு ☞ 2

## இனி அது ரகசியம் அல்ல!

இலங்கையின் பெரும் செல்வந்தர்களில்ஒருவரும்முன்னாள் ஜாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் நெருங்கிய நண்பருமான திலித் ஜெயவீரவின் மௌபிம ஜனதா என்கிற கட்சியின் தலைவர் பதவியில் இருந்து முன்னாள் அமைச்சர் சரத் அமுனுகமஓரிருநாள்களின்முன்னர் பதவி விலகியிருந்தார்.

அந்தக்கட்சியில்இருந்தநாடறிந்த ஒரேயொரு அரசியல் முகம் சரத் அமுனுகமவுடையதுதான். அதனால் அவரது பதவி விலகல் அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பாகப் பேசப்பட்டது.

திலித் ஜெயவீர அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் நோக்கத்தோடுஅரசியலில்முன்னேறி வருகின்றார். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவைப் பதவியில் இருத்தியமைக்குத் தா-னும் தனது ஊடகமும் முக்கிய காரணம் என்று அவர் நம்புகின்றார். அதனால் அந்த வழியிலேயே ஜனாதிபதித் தேர்தலை வெல்ல முடியும் என்றும் நம்புகின்றார். ☞ 2

## நீர் மின் உற்பத்தி இரு மடங்கு உயர்வு

தற்போது பெய்துவரும் கனமழையால் நீர் மின் உற்பத்தி சுமார் இருமடங்கு அதிகரித்துள்ளது என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்தாதர்.

''தற்போதைய மழையால் நீர் மின் உற்பத்தி 40 வீதத்தால் அதிகரித்துளளது. மழையுடனான வானிலை ஆரம்பமாகுவதற்கு முன்னர் நீர் மின் உற்பத்தியானது 20 சதவீதமாகவே காணப்பட்டது. 39 வீதமாககாணப்பட்டநீர்த்தேக்கங்களின் நீர் கொள்ளளவு, தற்போது 60 வீதமாக உயர்வடைந்துள்ளது" என்றார் அவர்.

## தேர்தல்களைப் பிற்போடுவது குறித்து ஜூன் 3 தெளிவுபடுத்துவாராம் பாலித

ஜனாதிபதி தேர்தல் நாடாளுமன்றத் தேர்தல்கள் குறித்து செவ்வாய்கிழமை தான் தெரிவித்த விடயங்களை அடுத்த திங்கட்கிழமை செய்தியாளர் மாநாட்டில் தெளிவுபடுத்தவுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலிதரங்க பண்டார தெரிவித்தார்.

சர்வஜனவாக்கெடுப்பின் மூலம் நாடாளுமன்ற ஜனாதிபதி தேர்தல்களை பிற்போடுவது குறித்து நான் செவ்வாய்கிழமை தெரிவித்ததை தொடர்ந்து பலர் பல கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நான் தெரிவித்த விடயங்களை தெளிவுபடுத்து வதற்காக ஜூன் 3 செய்தியாளர்செய்தியாளர்களை மீண்டும் சந்திப்பேன் என்று அவர் தெரிவித்துள்ளார். அன்றைய தினம் அனைத்து கேள்விகளுக்கும் ☞ 8

## பொருளாதார விவாதத்திற்கு வருமாறு சஜித் மீண்டும் ஜேவிபிக்கு அழைப்பு

நாட்டின்பொருளாதார முன்னேற்றம்தொடர்பாக விவாதம்நடத்தவருமாறு ஜேவிபிக்கு மீண்டும் அழைப்புவிடுத்துள்ளார் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதச.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத் திட்டத்தின் கீழ், 209 ஆவது கட்டமாகஸ்மார்ட் வகுப்பறை உபகரணங் களைஅம்பாந்தோட்டை, முல்கிரிகல, வீரகெடிய ராஜபக்ச மத்திய கல்லூரிக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

வங்குரோத்தான நாட்டில் நாம் செல்ல வேண்டிய பாதை, தொலைநோக்கு மற்றும் வேலைத்திட்டம் குறித்து விவாதமும் நேரிய கலந்துரையாடல்களும் இடம்பெறவேண்டும். இதன் மூலம் யோசனைகள் மற்றும் ஆலோசனைகளை பரிமாறிக்கொள்ள முடியுமாக இருக்கும்.

ஒவ்வொருவருக்கும் நல்லநல்லயோசனைகள் இருப்பதால், அந்த யோசனைகள் மற்றும் ஆலோசனைகள் விவாதிக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டு, அதன் மூலம் யோசனைகள் முன்வைக்கப்படுவதும், பொதுமக்கள்கருத்தாடல் நிகழுவதும் மிகவும் முக்கியமான விடயம்.

நமது நாடு நிதி ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் வங்குரோத்தடைந்து விட்ட நிலையில் 100 பில்லியன் அமெரிக்க டொலர் ☞ 2

## 2009 மீறல்கள் மீள நிகழாதிருக்க பொறுப்புக்கூறல் இன்றியமையாதது

### 'நோ பயர் ஸோன்' ஆவணப்பட இயக்குநர் வலியுறுத்து

இலங்கையில் 2009 ஆம்ஆண்டில்இடம்பெற்ற மிகமோசமான வன்முறைகள் மற்றும் மீறல்கள்மீண்டும்நிகழாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு உண்மை கண்டறியப்பட்டு, நீதி நிலைநாட்டப்படுவதும், பொறுப்புக்கூறல் உறுதிசெய்யப்படுவதும் இன்றியமையாததாகுமென'நோபயர்ஸோன்' ஆவணப்படத்தின் இயங்குநர் கெலம் மக்ரே வலியுறுத்தியுள்ளார்.

போர் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டு 15 ஆண்டுகள் பூர்த்தியடைந்திருப்பதை முன்னிட்டு கெலம் மக்ரே வெளியிட்டுள்ள நினைவுச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 15 வருடங்களின் பின்னர், அதனை நாம் மே 18 நினைவுகூருகின்றோம். இருப்பினும் தமிழ் ☞ 2

## தோட்ட தொழிலாளர்கள் சம்பளத்தில் தொடர்ந்து ஏமாற்றும் நிறுவனங்கள்

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள அதிகரிப்பு தொடர்பாக நேற்று நடைபெறவிருந்த பேச்சுக்களிலும் பெருந்தோட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்கேற்கவில்லை.

இதனால் சம்பளப் பிரச்சினை தொடர்பில் இணக்கப்பாட்டு எதுவும் எட்டப்படவில்லை.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பிலான பேச்சு நாரஹேன்பிட்டியிலுள்ள தொழில் அமைச்சில் நடைபெறவிருந்தது.

தொழில் ஆணையாளர், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ☞ 2

## ரஷ்ய போர்முனையில் 455 இலங்கையர்கள்

### நெருக்கடியில் என்கிறார் இராஜாங்க அமைச்சர்

ரஷ்ய போர்முனையில்455இலங்கையர்கள் நெருக்கடிக்குள்ளாகி உள்ளனனர் என்று வெளிவிவகாரத்துறை இராஜாங்க அமைச்சர் தாரகபாலசூரிய தெரிவித்தார்.

வெளிவிவகாரத் துறை அமைச்சின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

விசிட் விசா முறைமையின் ஊடாக ரஷ்யாவுக்குசென்ற455 இலங்கையர்கள்துரதிஷ்டவசமாக தற்போது நெருக்கடிக்குள்ளாகியுள்ளார்கள். போலியான வாக்குறுதிகளுக்கு ஏமாற்றமடைந்து இவர்கள் ரஷ்யா ☞ 8

### சட்டமா அதிபர் சேவை நீடிப்பு மூலம்

## நீதிமன்றங்களுக்கு ஜனாதிபதி அழுத்தம் கொடுக்க முயற்சியா?

### கேள்வி எழுப்புகிறார் சந்திம வீரக்கொடி

சட்டமா அதிபரின் சேவை நீடிப்பு மூலம் மறைமுகமாக நீதிமன்றங்களுக்கு அழுத்தம் கொடுக்க முயற்சிக்கப்படுகிறதா என்று கேள்வி எழுப்பியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம்அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய சட்டமா அதிபர் ஜூன் 26 முதல் ஓய்வு பெறவேண்டியுள்ளது. சேவைக் காலம் நீடிக்கப் ☞ 2

## அஷ்ரப்பை பண்டப் பொருளாக்கும் அரசியலை ஹரீஸ் கைவிடவேண்டும்

### அசாத்சாலி வலியுறுத்து

(சலீம்)

அரசியல் பிழைப்புக்காக பெருந்தலைவர் அஷ்ரபை பண்டப் பொருளாக கூவிவிற்கும் அரசியலை, உடன் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் கைவிட வேண்டுமென, மேல் மாகாண முன்னாள் ஆளுநரும் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவருமான அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

கல்முனையில் அஷ்ரப் அருங்காட்சியம் அமைப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் எடுக்கும் முயற்சிகள் குறித்து அதிருப்தி ☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

இவரை பெரமுனவுக்குள் கொண்டுவந்து அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக்க கோட்டாய ராஜபக்ச சில பல முயற்சிகளை மேற்கொண்டு பார்த்தார். ஆனால் அதற்கு வாய்ப்பளிக்கப்படவில்லை. திலித்தை கோட்டாவின் ஆளாகப் பார்த்த ஏனைய ராஜபக்சககளும் கட்சியினரும் அவருக்கு இடம்தர மறுத்துவிட்டனர்.

இதனால் கட்சி ஒன்றைவாங்கி அதன் வழி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் நோக்கத்தோடு முன்னேறுகின்றார் திலித். இந்த நிலையில் அவருக்குப் பெரும் பின்னடைவாகசரத்அமுனுகமவின் பதவி விலகல் அமைந்துள்ளது.

மௌபின ஜனதாக் கட்சியுடன் இனவாதக் கட்சிகள் கூட்டணி சேர்ந்துள்ளன. எனக்கு இனவாத அரசியலில் உடன்பாடில்லை என்பதால் கட்சியிலிருந்து விலகிவிட்டேன் என்று அவர் தெரிவித்தார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் யாரும் தெளிவான வெற்றியைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் இல்லாத நிலையில் தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகள் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு மிக முக்கியமாவை. அதனால் அளவுக்கதிகமாக இனவாதம் பேச முடியாத நிலையில் பிரதான கட்சிகள் இருக்கும் நிலையில் அந்த வெற்றிடத்தைத் தேர்தலில் நிரப்பும் நோக்குடன் திலித்தின் கட்சி முன்னேறி வருகின்றது என்று தெரிகின்றது. இது வரும் நாட்களில்தேர்தல்அரசியல்களத்தில் எத்தகையசெல்வாக்கைச்செலுத்தும் என்பது கவனத்துக்குரியது.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## அரச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேவையான அளவிற்கு மருத்துவர்களை நியமிப்பதற்கு அனுமதி வழங்காவிட்டால் வைத்தியர்கள் இன்றி பாதிக்கப்பட்டுள்ள மருத்துவமனைகளை மூடுவது குறித்து தீர்மானிக்கவேண்டிய நிலையேற்படும்

இலங்கை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு கூட்டத்தில் இது குறித்து தீர்மானிக்கப்படவுள்ளது. மருத்துவமனைகளிற்கு நியமிக்கப்படும் மருத்துவர்களின் எண்ணிக்கையைஅதிகரிக்காததால் நாட்டின்மருத்துவதுறையில்பெரும் நெருக்கடி உருவாகியுள்ளது.

நாட்டின் சனத்தொகை அதிகரிப்பிற்கு ஏற்ப நியமிக்கப்படும் மருத்துவர்களின்எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டும். அதிக மருத்துவர்களை உருவாக்கவேண்டும் பயிற்றுவிக்கவேண்டும்வசதிகளை அதிகரிக்கவேண்டுமென ஜனாதிபதி தெரிவித்துவருகின்றபோதிலும்புதிய மருத்துவர்களைஉருவாக்கினாலும் அவர்களிற்குநாட்டில்வேலைவழங்க முடியாத நிலையேற்பட்டுள்ளது.

1,390 மருத்துவர்கள் தங்கள் நியமனங்களை பெற்றுக் கொள்வதற்காக 8 மாதங்கள் காத்திருக்கவேண்டியுள்ளது நோயாளருக்கு உரிய சேவையை வழங்க முடியாமல் தடுமாறும் மருத்துவமனைகளிற்கு உதவக் கூடியமருத்துவர்களின்பரிதாபமான துரதிஸ்டவசமான நிலையிது நியமனங்களை வழங்குவதில் ஏற்படும் தாமதங்களை அறிந்தும் தொடர்புபட்ட தரப்பினர் உரிய நடவடிக்கைகளை எடுக்கின்றார்கள் இல்லை என்றார்.

## பொருளாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் சுமையிலிருந்து எமது நாட்டை விடுவிப்பதற்கான வேலைத்திட்டம், தீர்வு மற்றும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான கால அட்டவணை குறித்து கருத்தாடல் நடத்தப்படவேண்டும்.

பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் குறித்து விவாதம் நடத்துவது அபத்தமானது என்று சிலர் கூறுகின்றனர். இரு தரப்பு பொருளாதார குழுக்களுக்கும் இடையில்சினேகபூர்வவிவாதத்திற்கு அழைப்பு விடுக்கிறோம். அதனையடுத்து, தலைவர்கள் இருவருக்கும் இடையிலான விவாதத்திற்கு நாளை ஒதுக்கலாம்.

நான் உட்பட தனது குழுவினர் விவாதங்களில் இருந்து ஒழிந்து ஓட மாட்டோம். பொருளாதார தொலைநோக்கோ, வேலைத்திட்டமோ இல்லாதவர்கள்தான் இத்தகைய விவாதங்களில் இருந்து தப்பித்துக் கொள்கின்றனர். பொருளாதார குழுவும், பொருளாதார வேலைத்திட்டமும் இல்லாதவர்களுக்கு, பொருளாதர குழுவையும், பொருளாதார வேலைத்திட்டத்தையும் தயாரிக்க இந்த விவாதம் உதவ முடியும். எனவே, பொருளாதார குழுக்களின் விவாதம் மற்றும் தலைவர்களின் விவாதம் என இரண்டு விவாதங்களுக்குமான திகதிகளை ஒரே நேரத்தில் முடிவு செய்யுமாறு இறுதியாக ஒரு முறை கோரிக்கை விடுக்கின்றேன்.

பொருளாதார விவாதம் என்பது இந்நாட்டில் இன்றியமையாத விவாதம் என்பதுடன், இந்நாட்டு மக்கள் மேலும் ஏமாற்றப்படாமல் இருக்க, கல்வி மற்றும் சுகாதாரத்தை எவ்வாறு கட்டியெழுப்புவது என்பதை முறையாக தெளிவுபடுத்த பொருளாதார குழுக்களிடையேயான விவாதம் அவசியமானதாகும். எனவே, ஊடக காண்பிப்புகளைகாட்டுவதைவிடுத்து விவாதங்களுக்கான இரண்டு நாட்களையும் ஒரே நேரத்தில் தீர்மானிக்க அழைக்கிறேன், விவாதங்கள் மூலம் பொருத்தமான தீர்வுகளை மக்களுக்கு தெரிவிக்க முடியும்.

அரச நிதியினால் மாத்திரம் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது. சுனாமியின் போது எமது நாட்டுப் பாடசாலைகளை அபிவிருத்திசெய்ய வெளிநாடுகளில் உள்ள பாடசாலைகளில் இருந்து பணம் பெற்றுக் கொண்டது போல, அரச நிதியை மட்டுமன்றி ஏனைய உபாயங்களையும் பயன்படுத்தி கல்வி, சுகாதாரத்துறைகளை மேம்படுத்தலாம். இவை எதனையும் அரச நிதியில் மாத்திரம் தங்கியிருந்துபூர்த்திசெய்யமுடியாது. இதற்கான புதிய வளங்களை கண்டறியவேண்டும்.

பாடசாலைகளுக்கு நாங்கள் வளங்களை வழங்கும்போது பாடசாலையின்பெயர், ராஜபக்சவா, பிரேமதாசவா அல்லது விஜேவீரவா என்று பார்ப்பதில்லை. எமது நாட்டின் மோசமான அரசியல் கலாசாரத்தில்ராஜபக்சவின்பெயரைக் கொண்ட பாடசாலைகளுக்கு உதவவேண்டுமா என்று சிலர் கேட்கின்றனர். இதுபோன்ற சம்பிரதாய மோசமான மற்றும் கேலிக்குரிய வாதங்களிலிருந்து நாம் விலகி இருக்க வேண்டும்.

100 பில்லியன் டொலர் கடன் சுமையுடன் இருக்கும் வங்குரோத்து நிலையில் உள்ள இந்நாட்டின் பாடசாலைகளுக்கு ஏதாவது நல்லது நேரும் போது, அப்பாடசாலைக்களுக்கு ராஜபக்ச, பண்டாரநாயக்க, பிரேமதாச, விஜேவீர போன்றோரின் பெயரா சூட்டப்பட்டுள்ளது என்பதை தேடிப் பயனில்லை. நாட்டில் உள்ள 10,099 அரச பாடசாலைகளிலும் கல்வி கற்கும் 41 இலட்சம் மாணவர்கள் தொடர்பிலயேநாம்கவனம்செலுத்த வேண்டும்.

இந்நாட்டில் உள்ள பாடசாலைகளில் 3,000 பாடசாலைகளில் உயர்தர பாடங்கள் கற்பிக்கின்றன. அவற்றில் 1,000 பாடசாலைகளில் விஞ்ஞானம் மற்றும் கணிதம் கற்பிக்கப்படுகின்றன. இது மொத்த பாடசாலைக் கட்டமைப்பில் 10 சதவீதம் ஆகும். இவ்வாறானதொரு சூழ்நிலையில் ஒரு நாட்டைக் கட்டியெழுப்பப்பட முடியாது.

இலங்கை இதே போக்கில் சென்றால் வேலையில்லா திண்டாட்டம் தான் அதிகரிக்கும். தகவல் தொழில்நுட்ப புரட்சியை ஏற்படுத்துவோம் என நமது நாட்டு தலைவர்கள் கூறினாலும், தரம் 6- முதல் 11 வரையிலயே தகவல் தொழில்நுட்பம் கற்பிக்கப்படுகிறது. இதைமாற்றிதரம்1-13வரைஆங்கில மொழியை ஒரு பாடமாக கற்பிக்க வேண்டும். இவற்றைச்செய்வதற்கு முன்னர் பாடசாலைகளில் மனித வளம் மற்றும் பௌதீக வளப் பற்றாக்குறையை இல்லாதொழிக்க வேண்டும்

இந்தக்கல்விமுறைதொடர்ந்தால் வேலையில்லா திண்டாட்டம் அதிகரிக்கும். ஐக்கிய இராஜ்ஜியம் போன்றநாடுகளில்பட்டதாரிகளைத் தேடி பல்வேறு நிறுவனங்களும் அமைப்புகளும் செல்கின்றன. ஆனால் நமது நாட்டில் என்ன நடக்கிறது? பட்டதாரிகளே வேலை தேடி செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்தவித்தியாசத்தை நாம்புரிந்துகொள்ளவேண்டும். நமது நாட்டில்தற்போதுகிட்டத்தட்ட 50,000 பட்டதாரிகள் வேலையின்மையால் அவதிப்பட்டு வருகின்றனர்.

இறுதியில் பரீட்சையில் தேர்ச்சி பெற்று, பட்டம்பெற்றதன் பின்னரும் அரசியல்வாதிகளின் பின்னால் சென்று வேலை கேட்கும் ஒரு யுகம் உருவாகியுள்ளது. இதனைப்புரிந்து கொண்டு நல்லதொரு பாதையை நோக்கி பயணிக்க வேண்டும் என்றார்.

## நீதிமன்றங்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படும் பட்சத்தில் அவர் டிசெம்பர் வரையில் சட்டமா அதிபராகச் செயற்படுவார்.

தற்போதைய பிரதம நீதியரசர் ஒக்டோபர்மாதம்ஓய்வுபெறவுள்ளார். நாட்டில் உள்ள சட்டங்களுக்கு அமைவாக சேவை மூப்பின் அடிப்படையில் சட்டமா அதிபர் பிரதம நீதியரசராக முடியும்.

அவ்வாறாயின் மறைமுகமாக நீதிமன்றத்துக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்கவா முயற்சிக்கின்றனர். சேவை நீடிப்பு வழங்கப்பட்ட காலத்திலேயே ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும். சேவை நீடிப்பை வழங்குமாறு கோருகின்றவர் இன்னமும் ஆறுவாரங்களில் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடவுள்ளவரே இந்த பதவி நீடிப்பினை வழங்கவுள்ளார் என்பதை கவனத்தில கொள்ள வேண்டும் என்றார்.

## தோட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடிவேல் சுரேஷ் உள்ளிட்டோர் பேச்சுக்காக வருகை தந்திருந்த போதிலும் பெருந்தோட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள் எவரும்சமூகமளித்திருக்கவில்லை.

இது தொடர்பாக இதொகாவின் தலைவரும், கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான் தெரிவிக்கையில், ''அரசாங்கம் சொல்வதைக்கூட கேட்கும் நிலையில் தோட்ட நிர்வாகங்கள் இல்லை. எனவே, தொழிலாளர்களை மதிக்ககூடிய, தோட்டங்களை முறையாக நிர்வகிக்ககூடிய தரப்புகளுக்கு தோட்டங்களை வழங்குவதே சிறந்தது

1700 ரூபா தொடர்பில் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. இதனைபெருந்தோட்டநிறுவனங்கள் ஏற்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் வர்த்தமானி அறிவித்தலைமீறியமைதொடர்பில் வழக்கு தொடுக்கப்படும்'' என்றார்.

ஜனாதிபதியின் ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவிக்கையில், ''பெருந்தோட்டத்தொழிலாளர்களின் சம்பள உயர்வு விவகாரத்தில் முன்வைத்தகாலைஜனாதிபதிரணில் விக்கிரமசிங்கபின்வைக்கக்கூடாது. பெருந்தோட்ட நிறுவனங்களை நிர்வகிப்பவர்கள் ஜனாதிபதிக்கு கட்டுப்பட மறுக்கின்றனர், தொழில் அமைச்சருக்கும் கட்டுப்பட மறுக்கின்றனர். இதனை சரியாக நிர்வகிப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போதைய நிறுவனங்களுடனான குத்தகை உடன்படிக்கை இரத்து செய்யப்பட வேண்டும்'' என்றார்.

## அஷ்ரப்பை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் அசாத் சாலி மேலும் தெரிவித்துள்ளதாவது:

சிறீ ஷ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக தலைவர் அஷ்ரபின் ஆளுமைகள் காலத்தால் அழியாதவை. அவரது சிந்தனைகள் முஸ்லிம் சமூகத்தின் விலைமதிக்க முடியாத சொத்தாக மதிக்கப்படுகின்றன. அஷ்ரபின் மறைவுக்குப்பின்னர், அக்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் அவரது அடியொட்டி அரசியல் செய்யவில்லை. இதனால், புதைகுழியில் மூழ்கும் நிலைக்கு சமூக அரசியல் சென்றுள்ளது. இவ்வாறு இறுதி மூச்சைவிடும் அரசியல்வாதிகளில் ஒருவராகவே ஹரீஸ் உள்ளார்.

இது தேர்தல் காலம் என்பதால், தலைவர் அஷ்ரபின் பெயரை ஞாபகமூட்டி, இழந்த மவுசை உயர்த்தும் முயற்சியில் ஹரீஸ் இறங்கியுள்ளதாகவே தெரிகிறது. கல்முனையில் அஷ்ரப் அருங்காட்சியகம் அமைப்பதற்கு ஜனாதிபதியிடம்நிதிகோரிஉள்ளமை இதனையே புலப்படுத்துகிறது.

ரணிலுக்கு தலையைக் காட்டி, சஜிதுக்கு முதுகைக் காட்டி மற்றும் ஹக்கீமுக்கு ஊரைக்காட்டி அரசியல் செய்யும் இவரால் எதைச் சாதிக்க முடிந்தது? தலைமைக்கு விசுவாசம் இல்லாத ஹரீஸ் சமூகத்தை நேசிப்பார் அல்லது சொந்த ஊரை வாழ வைப்பார் என்றெல்லாம் எதிர்பார்க்க முடியாது. இவரது எண்ணமெல்லாம் அஷ்ரபின் பெயரை விற்று நாடாளுமன்ற உறுப்பினராகுவது மாத்திரமே.

இந்த 24 வருட இடைவெளியில் ஷ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அஷ்ரபுக்காக எதைச் செய்தது? அதிகாரத்தில் இருந்த காலங்களிலாவது பெருந்தலைவரின் இறப்புக் குறித்து உறுதியான முடிவைப் பெற முடிந்ததா? ஆகக் குறைந்தது தலைவரதும் அவரதும் மற்றும் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முகத்தோற்றமுமாக உள்ள ஊரான கல்முனைக்காவது இவரால் எதையும் செய்ய இயலவில்லை. ஏனைய முஸ்லிம் அரசியல்வாதிகள் தங்களது ஊர்களையாவது அபிவிருத்தி செய்து உருப்படவைத்துள்ளனர். கல்முனையில் ஒரு சந்தைக் கட்டடம் இல்லை. மாநகர சபைக்கு முறையான அமைவிடம் இல்லை. உடைந்து கிடக்கும் வாசிகசாலையை கட்டவக்கில்லை. சாய்ந்தமருதுமக்களைஇணைத்துச் செல்லும் திட்டம் துளியளவும் இல்லை. இந்த இயலாமைகளை மறைப்பதற்கே, கல்முனையில் அஷ்ரப் அருங்காட்சியகம் அமைக்க முயல்கிறார்.

தலைவரின் குடும்பத்தினர்கூட இதை விரும்பவில்லை. அமான் அஷ்ரப் அவரது டுவிட்டரில் இதை வன்மையாக எதிர்த்துள்ளார். விவசாய ஆய்வுகூடம், மீன்களைப் பதனிடும் தொழிற்சாலை அல்லது ஒலுவில் துறைமுகப் பிரச்சினை இதுபோன்று உருப்படியாகச் சிந்திக்காமல், அஷ்ரபின் பெயரை சில்லறை வியாபாரமாக மாற்றுவதற்கு ஹரீஸுக்கு எந்த அருகதையும் கிடையாது. முஸ்லிம் சமூக எழுச்சி குறித்து சிந்தித்த தலைவர் அஷ்ரபை, அருங்காட்சியகத்துக்குள் அடைத்துவைக்க முடியாது என்றும் அசாத் சாலி குறிப்பிட்டுள்ளார்.

## 2009 ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுக்கு எதிரான மீறல்கள் தொடர்கின்றன.

வலிந்து காணாமலாக் கப்பட்டோரின் உறவினர்கள் உள்ளடங்கலாகப் பாதிக்கப்பட்ட தரப்பினர் அதனால் ஏற்பட்ட தாக்கத்துடனேயே தொடர்ந்து வாழ்கின்றனர்.

இவ்வாறானதொருசூழ்நிலையில் பாதிக்கப்பட்ட தரப்பினர் அவர்களது அன்புக்குரியவர்களைநினைவு கூருவதற்கான உரிமை இலங்கை அரசினால் மறுக்கப்படுகின்றது. அதேபோன்று இன்றளவிலேயே தமிழர் தாயகப் பகுதிகள் பாதுகாப்புத் தரப்பினரின் வலுவான கட்டுப்பாட்டின்கீழ் இருக்கின்றது.

எனவே முன்னெப்போதையும்விட இப்போது உண்மை மற்றும் நீதி என்பன உடனடியாக உறுதிப்படுத்தப்படவேண்டியது மிகவும் அவசியமாகின்றது. 2009 ஆம் ஆண்டில் இடம்பெற்ற மிகமோசமான சம்பவங்கள் மீண்டும் நிகழாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு உண்மை கண்டறியப்பட்டு, நீதி நிலைநாட்டப்படுவதும், பொறுப்புக்கூறல் உறுதிசெய்யப்படுவதும் இன்றியமையாததாகும்.

இதேபோன்ற சம்பவங்களே இன்று காஸாவில் இடம்பெறுகின்றன. காஸாவில் வாழும் ஆயிரக்கணக்கான ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், குழந்தைகள் என சகல மக்களுக்கு எதிராக இஸ்ரேலிய அரசால் மிகமோசமான மீறல்களைக் கட்டவிழ்த்துவிட்டிருக்கின்றது.

இலங்கையில் இடம்பெற்ற மீறல்களால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கான நீதி மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதில் இலங்கை அரசும், சர்வதேச சமூகமும் அடைந்திருக்கும் தோல்வி, தற்போது காஸாவில் இடம்பெற்றுவரும் அதனையொத்த மீறல்களைநியாயப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. மனித உரிமைகள் மற்றும் நீதிக்கு மதிப்பளிக்கும் சகலரும் இனி இவ்வாறான சம்பவங்கள் நடைபெறக்கூடாது என்பதை உறுதிப்படுத்தப் பாடுபடவேண்டும் - என்றுள்ளது.

## ரஷ்ய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வுக்கு சென்றுள்ளார்கள். இவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு இராஜதந்திரமட்டத்தில்மனிதாபிமான அடிப்படையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்விடயம் தொடர்பில்

தொடர்ச்சி 8ம் பக்கம்....



காலைக்கதிர் Kalaikkathir

# ஒரு வருடத்தில் மட்டும் கிறிஸ்தவர்களுக்கு எதிராக 63 வன்முறைச் சம்பவங்கள் பதிவு

இலங்கையில் 2022 நவம்பர் - 2023 ஒக்ரோபர் வரையான ஒருவருடகாலத்தில் நாடளாவிய ரீதியில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக 63 வன்முறைச்சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன எனவும், இவற்றில் முறையே புத்தளம், களுத்துறை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையான சம்பவங்கள் பதிவாகியிருக்கின்றன எனவும் இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேச (எவாஞ்சலிக்கல்) கூட்டிணைவால் வெளியிடப்பட்டுள்ள புதிய ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் கடந்த 2022 நவம்பர் - 2023 ஒக்ரோபர் வரையான 12 மாதகாலப்பகுதியில் கிறிஸ்தவ சமூகத்துக்கு எதிராக இடம்பெற்ற அத்துமீறல் மற்றும் வன்முறை சம்பவங்கள் தொடர்பில் இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேச கூட்டிணைவால் சேகரிக்கப்பட்டு வழங்கப்பட்ட தரவுகளை அடிப்படையாகக்கொண்டு வெரிட்டே ரிசேர்ச் அமைப்பால் 'இலங்கையில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறைகளின் போக்கு தொடர்பான ஆய்வு' எனும் 60 பக்க ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் வெளியீட்டு நிகழ்வு செவ்வாய்கிழமை கொழும்பில் அமைந்துள்ள இனத்துவ கற்றைகளுக்கான சர்வதேச நிலையத்தின் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

நாட்டின் அரசியல் களநிலைவரத்தில் எத்தகைய மாற்றங்கள் ஏற்படினும், அதற்கு அப்பால் சிறுபான்மையின சமூகங்களுக்கு எதிரான இன, மத ரீதியான வன்முறைகள் இலங்கையில் நீண்டகாலமாகத் தொடர்ந்து வருகின்றன என இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதுடன், மேற்குறிப்பிட்ட 12 மாதகாலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக மத ரீதியாக இடம்பெற்ற 63 வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

அதேபோன்று முஸ்லிம்கள் மற்றும் இந்துக்களுக்கு எதிரான வன்முறை சம்பவங்கள் குறித்து மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான தரவுகள் கிடைக்கப்பெற்றதன் காரணமாக, அவைபற்றி சுருக்கமாக விளக்கமளிக்கப்பட்டிருப்பதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

'இலங்கையில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறைகள் பிரதானமாக அரச அதிகாரிகளாலும், அடையாளங்காணப்பட்ட தனிநபர்களாலும் நிகழ்த்தப்படுகின்றன. அரச அதிகாரிகள் கிறிஸ்தவர்களையும், கிறிஸ்தவ தலைமையையும், கிறிஸ்தவ அடையாளங்களையும் இலக்குவைக்கும் அதேவேளை, அரசு சாராத ஏனைய தரப்பினர் கிறிஸ்தவர்களையும், தேவாலயத்தில் ஆராதனைகளுக்குச் செல்வோரையும் இலக்குவைக்கின்றனர். இதனை நீண்டகாலமாக சேகரிக்கப்பட்ட தரவுகள் உறுதிப்படுத்துகின்றன' என மேற்குறிப்பிட்ட ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேபோன்று, கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறைகள் ஒடுக்குமுறை நடவடிக்கைகள் முதல் உடலியல் ரீதியில் தீங்கு விளைவித்தல்வரை பல்வேறு வடிவங்களில் இடம்பெறுகின்றன எனவும், இந்நாட்டின் சகல பிரஜைகளினதும் மதச்சுதந்திரத்தைப் பாதுகாக்கவேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருக்கும் அரசாங்கம், மறுபுறம் கிறிஸ்தவர்கள் உள்ளடங்கலாக சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிடுவதற்காக பொலிஸாரையும், ஏனைய அரச அதிகாரிகளையும் பயன்படுத்துவதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த அறிக்கையின் பிரகாரம் நாடளாவிய ரீதியில் 15 மாவட்டங்களில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான மத ரீதியிலான வன்முறை சம்பவங்கள் பதிவாகியிருப்பதுடன் அவற்றில் பௌத்தர்கள் பெரும்பான்மையாக வாழும் புத்தளம் (18 சம்பவங்கள்), களுத்துறை (7 சம்பவங்கள்) மற்றும் இந்துக்கள் பெரும்பான்மையாக வாழும் யாழ்ப்பாணம் (7 சம்பவங்கள்) என்பன அதிக எண்ணிக்கையான வன்முறைகள் பதிவான மாவட்டங்களாக அடையாளங்காணப்பட்டுள்ளன. (05)

# மரக்கறிகளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படுவதுடன் விலைகள் துரிதமாக எகிறும் நிலைமை வருமாம்

## நுவரெலியா பொருளாதார நிலையம் தகவல்

எதிர்காலத்தில் மரக்கறிகளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படுவதுடன் விலைகள் துரிதமாக உயரும் என நுவரெலியா பொருளாதார நிலையம் எச்சரித்துள்ளது.

நிலவும் கடும் மழை மற்றும் காற்றுடன் கூடிய காலநிலை காரணமாக பயிரிடப்பட்ட விவசாய நிலங்களில் தண்ணீர் தேங்கி பயிர்கள் அழிந்து போவதாலும், காற்றால் மரக்கறி வேர்கள் உதிர்ந்து போவதாலும் தேவைக்கு ஏற்ப விநியோகம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மற்றும் மரக்கறிகளின் விலை படிப்படியாக அதிகரிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும், சுமார் ஒரு மாத காலப்பகுதிக்குள் மரக்கறிகளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படும் சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன எனவும் நுவரெலியா பொருளாதார நிலைய வர்த்தக சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மரக்கறி விலைகள் மற்றும் தற்போதைய விவசாயிகளின் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவதற்காக நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தில் தொழிற்சங்கம் நேற்று (வியாழக்கிழமை) ஏற்பாடு செய்திருந்த விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தின் தலைவர் சுசில் சாந்த, செயலாளர் குணசேகரன் சிவா ஆகியோர் ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

ஒரு கிலோ முட்டைகோஸ் கொள்முதல் விலை 70 ரூபாவாகவும், கேரட் கிலோ ஒன்றின் கொள்முதல் விலை 120 ரூபாவாகவும், ஒரு கிலோ கொள்முதல் விலை 300 ரூபாவாகவும், ஒரு கிலோ முள்ளங்கி கொள்முதல் விலை 80 ரூபாவாகவும், கொள்முதல் விலை ஒரு கிலோ பீட்ரூட் 320 ரூபாவாகவும், ஒரு கிலோ உருளைக்கிழங்கின் கொள்முதல் விலை 280 ரூபாவாகவும் உள்ளது.

நாட்டில் உள்ள மற்ற பொருளாதார மையங்களுடன் ஒப்பிடும்போது நுவரெலியா பொருளாதார மையம் ஒரு தனிச்சிறப்பு வாய்ந்த இடமாகும்.

நாங்கள் அதிக கமிஷன் வாங்குவதில்லை, ஏனென்றால் நாங்கள் தோட்டங்களில் காய்கறிகளை அறுவடை செய்கிறோம், தொழிலாளர்களுக்கு கொடுக்க வேண்டிய கூலி மற்றும் போக்குவரத்து கட்டணம் ஒரு கிலோவுக்கு பத்து முதல் இருபது ரூபா வரை. விலை பதாதையில் பட்டியலிடப்பட்டுள்ள காய்கறிகளின் விலையை விட குறைவாக உள்ளது.

விவசாயிகளுக்கு நேரடியாக காய்கறிகள் கொடுக்கச் சொன்னாலும் தருவதில்லை , கிலோ கணக்கில் பயன்படுத்த முடியாத காய்கறிகள் அங்கிருந்து அகற்றப்படுகின்றன.

அதனால்தான் தோட்டத்திற்கு சென்று தேவையானதை மட்டும் பெற்றுக் கொள்கிறோம்.

நுவரெலியா பொருளாதார நிலையங்களில் உள்ள சில கடைகளில் காய்கறிகளுக்கான பணத்தை விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் கொடுப்பதில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது.ஆனால் இன்று வரை இது குறித்து எங்களுக்கு நேரடி முறைப்பாடு வரவில்லை.

மேலும் பணம் தொடர்பான வேறு ஏதேனும் பிரச்சனைகளை நேரடியாக அதிகாரிகளிடம் முன்வைத்தால் அதற்கான தீர்வுகளை வழங்க தயாராக உள்ளோம். - என்றார். (05)

# ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளுடன் தொடர்பு வைத்திருந்த இருவர் கைது


இலங்கை ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகளுடன் தொடர்பு வைத்திருந்ததாக கூறப்படும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்தவாரம் இந்தியாவில் கைது செய்யப்பட்ட நான்கு இலங்கை ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகளுடன் தொடர்பு வைத்திருந்ததாக கூறப்படும் சந்தேக நபர்கள் இருவர் மாவனல்ல பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எஸ்ஐஎஸ் அமைப்புடன் தொடர்புடைய நான்கு இலங்கையர்கள் கடந்த 20ஆம் திகதி இந்தியாவின் அஹ்பாத் விமான நிலையத்தில் குஜராத் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நால்வரில் பொட்டா நௌபர் என்ற ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான நியாஸ் நௌபர் என்பவரின் மகனான மொஹமட் நஃப்ரான் நௌபர் என்பவர் இந்தியாவில் பயங்கரவாதத் தாக்குதலுக்குத் தயாராகி வருவதாக கிடைத்த உளவுத் தகவலின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார்.(05)

# எரியும் நினைவுகள் ஆவணப்பட திரையிடல்





தமிழ்சிவில்சமூகஅமையத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண பொது நூலகத்தின் கதையின் எரியும் நினைவுகள் என்னும் கருப்பொருளில் ஆவணப்படத் திரையிடலும் கலந்துரையாடலும் யாழ்ப்பாண பொதுநூலகத்தின் கேட்போர் கூடத்தில் கடந்த புதன்கிழமை மாலை நடைபெற்றது.

யாழ்ப்பாணம் பொதுநூலகத்தின்



கதையின் எரியும் நினைவுகள் என்னும் கருப்பொருளில் ஆவணப்படத் திரைப்படத்தை இயக்குநர் ப.சோபிதர்மன் இயக்கியுள்ளார்.

இந்த நிகழ்வில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், யாழ்ப்பாண பல்கலைக் கழக கலைப்பீட பீடாதிபதி ம.ரகுராம், தவத்திரு. வேலன் சுவாமிகள், முன்னாள் ஈழநாடு பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ம.இராதையன், இலக்கியவாதிகள், தமிழ் சிவில் சமூக இளைஞர், யுவதிப்பிரதிநிதிகள், சான்றோர்கள், கலைஞர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதில் 1981ஆம் ஆண்டிலிருந்து 1986 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாண பொது நூலகம் எரியூட்டப்பட்ட போதும், ஏற்பட்ட





அழிப்பு மற்றும் ஊரடங்கு சட்டத்தின் போது அங்குள்ள கடைத்தொகுதிகள் அழிப்பும், கறுப்பு ஜூலை தொடர்பாகவும், பொதுமக்களின் இடப்பெயர்வுகளும் அழிவுகளும் தொடர்பான ஆவணபடமாக்கல் தொடர்பான ஆக்கபூர்வமான கருத்துக்களும் கேட்டறிந்து கலந்துரையாடப்பட்டன. (05)

# மோட்டார் சைக்கிளில் மனைவியுடன் சென்றவர் காட்டு யானை தாக்கி சாவு!

அனுராதபுரம், மதவாச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தில்லன்கல்ல பிரதேசத்தில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார் என மதவாச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

நேரியகுளம் பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் தனது மனைவியுடன் வயலை நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருக்கும் போது இவ்வாறு காட்டுயானை தாக்கி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தின் போது இவரது மனைவி எந்தவித காயங்களுமின்றி உயிர்தப்பியுள்ளார் எனப்பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரது சடலம் பிரேதப் பரிசோதனைக்குப் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05)

# பெண் பொலிஸ் உத்தியோகத்தரின் ஏ.ரி.எம் அட்டை சகாக்களால் திருட்டு

## இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட ஐவர் கைது

பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் ஏ.ரி.எம் அட்டையைப் பயன்படுத்தி 15,150 ரூபா பெறுமதியான பொருட்களைக் கொள்வனவு செய்ததாகக் கூறப்படும் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் கந்தேநுவர பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களும் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 24 ஆம் திகதி அன்று மாத்தளை பிரதேசத்தில் வைத்துக் காணாமல்போன தனது ஏ.ரி.எம் அட்டையிலிருந்து 15,150 ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக மாத்தளை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

இதனையடுத்து, மாத்தளை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# பொருளாதார மீட்பு நடவடிக்கைகள் அரச சேவைகளை பாதிக்கக் கூடாது

போதியளவிற்கான மருத்துவர்கள் நியமிக்கப்படாததன் காரணமாகஅரசசுகாதாரசேவைபாதிக்கப்படக்கூடியஅபாயம் குறித்தும்பலவைத்தியசாலைகளைமூடவேண்டியதேவையும் ஏற்படும் என்று அபாய அறிவிப்பு வெளியிட்டிருக்கின்றது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்.

''உரிய தரப்பினர் நாட்டின் மருத்துவ அமைப்பிற்கு தேவையான அளவிற்கு மருத்துவர்களை நியமிப்பதற்கு அனுமதி வழங்காவிட்டால் வைத்தியர்கள் இன்றி பாதிக்கப்பட்டுள்ள மருத்துவமனைகளை மூடுவது குறித்து தீர்மானிக்கவேண்டிய நிலையேற்படும்

இலங்கைஅரசமருத்துவஅதிகாரிகள்சங்கத்தின்மத்திய குழு கூட்டத்தில் இது குறித்து தீர்மானிக்கப்படவுள்ளது. மருத்துவமனைகளிற்கு நியமிக்கப்படும் மருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்காததால் நாட்டின் மருத்துவதுறையில் பெரும் நெருக்கடி உருவாகியுள்ளது.

நாட்டின்சனத்தொகைஅதிகரிப்பிற்குஏற்பநியமிக்கப்படும் மருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டும். அதிக மருத்துவர்களை உருவாக்கவேண்டும் பயிற்றுவிக்கவேண்டும்வசதிகளைஅதிகரிக்கவேண்டுமென ஜனாதிபதி தெரிவித்துவருகின்ற போதிலும் புதிய மருத்துவர்களை உருவாக்கினாலும் அவர்களிற்கு நாட்டில் வேலை வழங்க முடியாத நிலையேற்பட்டுள்ளது.


1,390 மருத்துவர்கள் தங்கள் நியமனங்களை பெற்றுக்கொள்வதற்காக 8 மாதங்கள் காத்திருக்கவேண்டியுள்ளதுநோயாளருக்குஉரியசேவையை வழங்க முடியாமல் தடுமாறும் மருத்துவமனைகளிற்கு உதவக்கூடியமருத்துவர்களின்பரிதாபமானதுரதிஸ்டவசமான நிலையிது நியமனங்களை வழங்குவதில் ஏற்படும் தாமதங்களை அறிந்தும் தொடர்புபட்ட தரப்பினர் உரிய நடவடிக்கைகளை எடுக்கின்றார்கள் இல்லை" என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர் வைத்தியர் சமால் விஜயசிங்க தெரிவித்தார்.

ஏற்கனவே கல்வியைத் தனியார் மயப்படுத்தும் நோக்கத்தோடு உயர் கல்வித்துறையை, குறிப்பாக அரச பல்கலைக்கழங்களைப் பலவீனப்படுத்தி மாணவர்களைத் தனியார் பல்கலைக்கழகங்களின் பக்கம் தள்ள அரசு முயற்சிக்கிறதோ என்கிற சந்தேகங்கள் கிளப்பப்பட்டு வரும் நிலையில் சுகாதாரத்துறையிலும் அத்தகைய நிலை நோக்கி ஆளும் தரப்பு நகர முயற்சிப்பதான தோற்றப்பாட்டை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் குற்றச்சாட்டு ஏற்படுத்துகின்றது.

தெற்காசியாவிலேயே மிக நீண்ட காலமாக கல்வி மற்றும் சுகாதாரம் ஆகிய இரு துறைகளிலும் மிக முன்னேறிய நாடாக இலங்கை இருந்து வந்திருக்கின்றது. இங்கு இந்த இரு கட்டமைப்புக்களும் உறுதியானவையாகவும் அரசுக்குரியவையாகவும் இருந்து வந்தமை அதற்கான காரணம். பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து இந்தச் சேவைகளை எல்லாம் அரசின் சுமைகளாக ஆட்சயாளர்கள் கருததத் தொடங்குகியிருக்கிறார்கள். அதனாலேயே இந்தத் துறைகளைத் தனியார் மயப்படுத்தி பொருளாதார மீட்சியைத் சாத்தியமாக்க அவர்கள் முயற்சிக்கின்றார்கள்.

அதே நேரத்தில் பொருளாதார மீட்சிக்காக, இலவச கல்வி மற்றும் மருத்துவத்துறைகளை நலிந்துபோக அரசு இடமளிக்கக்கூடாது. இந்தத்துறைகளில்தனியார்முதலீட்டை அதிகரிக்கும் வகையில் அரச ஊக்குவிப்பை வழங்கும் அதேவேளை, அரசின் ஈடுபாட்டைக் குறைக்கக்கூடாது. தரமான சுகாதாரத்துறையின் தேவையைப் பூர்த்தி செய்வது அரசின் கடமை. அதிலிருந்து வழுக இடமளிக்க முடியாது.

# நல்லவரா, கெட்டவரா?



**என். சத்தியமூர்த்தி**

அண்மையில் மூன்று நாள் சுற்றுப் பயணமாக வட மாகாணத்திற்கு வருகை தந்திருந்த ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கே, தென்னிலங்கைஅரசியலில் தனதுபரமஎதிரியானசஜித்பிரேமதாசாவை'வைத்து செய்திருக்கிறார்'. அதுவும், உடல் சுகவீனமான விக்கினேஸ்வரனை காரணியாக வைத்து அவர் ஆடிய ஆட்டம், சஜித்தை 'உள்ளே- வெளியே' என்ற வகையில் தென்னிலங்கை சிங்கள பேரினவாதிகளிடம் காட்டி கொடுத்திருக்கிறது. அல்லது, அவ்வாறு காட்டி கொடுத்துவிடும்.

சம்மந்தன் உடல் நலம் குன்றி கனகாலம் ஆன பின்னரும், அவரது கொழும்பு இல்லத்திற்கு சென்று ரணில் மரியாதை நிமித்தம் சந்தித்தார் இல்லை. மாறாக, உடல் நலமில்லை என்று கூறிக்கொண்டே விக்கியை அவரது யாழ்பாண இல்லத்தில் சந்தித்த ரணில், அவரிடம் பேசியது என்னவோ 'அக் மார்க'; அரசியல்தான்.

அந்த வகையில், தனது மே தின உரையில், தான் ஜனாதிபதியானால், தமிழர்களுக்கு 13ஆ-வது திருத்தத்தின் ஊடான அனைத்து அதிகாரங்களையும் அளிப்பேன் என்று சஜித் கூறியது குறித்து அவரிடம் விக்னேஸ்வரன் ஒரு உறுதிமொழி பெறவேண்டும் என்று ரணில் கூறிச் சென்றுள்ளார். அல்லது பத்திரிகை செய்திகள் அவ்வாறு கூறுகின்றன.

ரணிலின் கூற்றின்படி, சஜித் பிரேமதாசாவும் தன்னைப் போலவே, பொலிஸ் தவிர்த்த அதிகாரங்கள் மட்டுமே அளிப்பார் என்று உறுதியாக நம்புகிறார். அதனை அவர் விக்கினேஸ்வரனிடம் தெரிவித்து, அது குறித்து சஜித்திடமிருந்து ஒரு தெளிவான முடிவை பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

இதில்தான், ரணிலின் குள்ளநரி தந்திரம் ஒளிந்துள்ளது. சஜித்தின் மே தினப் பேச்சை தென்னிலங்கையில் அனைவரும் முழுமையாக அவதானித்தார்களா என்று தெரியவில்லை. அவர்களுடைய கவலைகள் எல்லாம், தங்களது வாழ்வாதார பிரச்சினைகள் குறித்தவையே. அது குறித்து, சஜித் தெளிவாக எந்தவொரு வாக்குறுதியையும் தனது மக்கள் முன் வைக்கவில்லை. ஆனால், தேர்தல் நேரம் என்பது வேறு. அப்போதும், பொருளாதார பிரச்சினைகளே தென்னிலங்கை வாக்காளர்களையும் ஆட்டிப்படைக்கும். என்றாலும், அரசியல் பிரச்சினைகள் குறித்தும் அவர்கள் அவதானமாகவே இருப்பார்கள். அதிலும் குறிப்பாக, இனப்பிரச்சினை குறித்து தங்களது வேட்பாளர்கள் தமிழ் மக்களுக்கு அளிக்கும் உறுதிமொழியை, காதும் கண்ணும் மூடாமலே அவதானிப்பார்கள்.

அதாவது, மே தின விழாவில் சஜித் தமிழ் வாக்காளர்களுக்கு அளித்த உறுதிமொழியில் பொலிஸ் அதிகாரமும் இருந்தது என்று அவர் விக்கினேஸ்வரன் மூலம் உறுதி அளித்தால், அவருக்குத் தென்னிலங்கையின் கணிசமான பேரினவாதிகளின் வாக்குகள் கிடைக்கவே கிடைக்காது. மாறாக, தான் பொலிஸ் அதிகாரம் குறித்து நினைத்துக்கூடப் பார்க்கவில்லை என்று அவர் கூறுவாரேயானால், தமிழர்கள் அவரை ஏமாற்று பேர்வழி என்று இப்போதே முடிவு கட்டி விடுவார்கள்.

ரணிலைப்பொறுத்தவரை, சஜித்விடயத்தில், இது 'தலை விழுந்தால் எனக்கு வெற்றி, பூ விழுந்தால் உனக்கு தோல்வி' என்ற ஆடு-புலி ஆட்டம். சஜித் ஒன்றில் தமிழர் வாக்குகளையோ அல்லது சிங்கள பேரினவாதிகளின் வாக்குகளையோ, தேர்தல் தொடங்கும் முன்னரே இழந்து விடவேண்டும். இதுதான் ரணிலின் திட்டம்.

### பிரித்தாளும் சூழ்ச்சி

இல்லையென்றாலும், தமிழ் பொது வேட்பாளர் குறித்த ரணிலின் கரிசனை எதிர்பார்க்கக் கூடிய விடயமே. தான், ராஜபக்சக்களின் தயவில் ஆட்சியில் இருக்கும்வரை, ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் தன்னை ஆதரிக்க மாட்டார்கள் என்று அவர் திடமாக நம்பலாம். அவரது யாழ்பாண அரசு விழாவில் பங்கேற்று சுமந்திரன் அவருக்கு 2005- தேர்தல் குறித்து நினைவுறுத்தியது குறிப்பிடப்பட வேண்டிய விடயம்.

ஒரு விதத்தில், 2005 தேர்தல் போன்று தற்போதும், தமிழர்களின் வாக்குகளை பெறமுடியாமல், ரணில் தோல்வி அடையும் வாய்ப்பு உள்ளது என்று சுமந்திரன் ரணிலுக்கு சூசகமாக சொன்னார் என்றுகூட அதனை எடுத்துக் கொள்ளலாம். அதாவது, தமிழர் வாக்கு குறித்து தற்போது முடிவு செய்ய வேண்டியவர் ரணிலே, என்று சுமந்திரன் தெளிவுபடுத்தினார் எனலாம். ஆனால், ரணிலை பொறுத்தவரை அவரது திட்டம் இரண்டு பகுதிகளை கொண்டது.

ஒன்று, தமிழர் வாக்குகள் தனக்கு தேவை என்பது. மற்றது, தனக்கு கிடைக்கவில்லை என்றால், ஒரு பொது தமிழ் வேட்பாளர் மூலம் அந்த வாக்குகளை தனக்கு எதிரான சஜித் பிரேமதாசா அல்லது அனுர குமார திசநாயக்க ஆகியோருக்கு செல்லாமல் பார்த்துக்கொள்வது.

### எதிர்மறை கருத்து

ரணிலின் பொது நிகழ்வில் கலந்துகொண்டு விட்டு, சுமந்திரன், பொது வேட்பாளர் குறித்து எதிர்வரும் ஜீன் 9 அன்று அனைத்து தமிழ் தரப்புகளும் வெளிப்படையாக கலந்து பேச தான் ஏற்பாடு செய்திருக்கிறார் என்று கூறி உள்ளார். அவரது நிகழ்ச்சியில் எத்தனை தமிழ் கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்பினர் பங்குபெற இருக்கிறார்கள் என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

இப்போதே, விக்கினேஸ்வரன், சுமந்திரனின் இந்த முயற்சி, தமிழ் மக்களை திசைதிருப்பும் வழியே என்று கூறி உள்ளார். அவரைப் பொறுத்த வரையில், தமிழ் பொது வேட்பாளர் என்ற கருத்தை ஆதரிக்கிறார். அதேசமயம், ஜனாதிபதி ரணிலின் ஐக்கிய தேசிய கட்சி முன்வைத்துள்ள

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

காலைக்கதிர் Kalaikkathir

# நல்லவரா, கெட்டவரா?

4ம் பக்க தொடர்ச்சி...........

எதிர்மறையான கருத்து ஒன்றையும் வரவேற்றுள்ளார்.

தலைநகர் கொழும்பில், பத்;திரிகையாளர் சந்திப்பு ஒன்றில் பேசிய ஐக்கிய தேசிய கட்சியின் பொது செயலாளர் பலித ரங்கே பண்டாரா, ஜனாதிபதி தேர்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தல் ஆகிய இரண்டையுமே இரண்டு ஆண்டுகள் பிற்போட வேண்டும் என்று கருத்துத் தெரிவித்து உள்ளார். அவர் இவ்வாறு கூறியதற்குக் காரணங்கள் எதுவாக இருந்தாலும், அதனை அவர் ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில் வெளியிட வேண்டுமென்றால், ஜனாதிபதி ரணிலின் அனுமதி இல்லாமல் அவர் இவ்வாறு கூறியிருக்க முடியாது.

### கேள்விக்குறியே

அப்படி என்றால், ரணிலின் திட்டம்தான் என்ன? ரங்கே பண்டாராவின் அறிவிப்பிற்குச் சில நாட்களுக்கு முன்னர்தான், அமைச்சரவை கூட்டத்தில், ஜனாதிபதி தேர்தலை மட்டுமே முதலில் நடத்தப்போவதாக ரணில் அறிவித்திருந்தார். அதில் தானும் போட்டியிடப் போகிறார் எனவும் அவர் தெரிவித்தார் என்று பத்திரிகைச் செய்திகள் கூறின.

ரணில் இன்றளவும் ஜனாதிபதித் தேர்தலில்தான் போட்டியிடப்போவது குறித்து பொதுவெளியில் அறிவிக்கவில்லை. என்றாலும், அவரது அமைச்சரவை அறிவித்தலுக்குப் பின்னர், கட்சியின் கருத்து என்பது, தனது தற்போதைய ஆதரவாளர்களான ராஜபக்சக்களையும் எதிரணியில் உள்ள சஜித் பிரேமதாச, அனுரகுமார திசநாயக்கே போன்றோரையும் ஒரு சேர குழப்பத்தில் ஆழ்த்தும் தந்திரமே.

ரங்கே பண்டாராவின் கருத்து, நாடாளுமன்றத்தில் உள்ள அனைத்து கட்சி உறுப்பினர்களையும் குறிவைத்து வெளியிடப்பட்டது. கடந்த இரண்டு வருட ரணில் ஆட்சி காலத்தில், அவரது தரப்பு எவ்வளவு கூறினாலும், மொட்டு கட்சி மற்றும் சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்தி ஆகியவற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணிலை மட்டும் நம்பி, அவர் பக்கம் சாய்வதற்குத் தயாரில்லை.

ரணில் தரப்பில் சாய்வதற்கு மொட்டு கட்சி அமைச்சர்கள் சிலர் தயாராக இருக்கின்றனர் என்பது என்னவோ உண்மை. ஆனால், மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாருமே அவ்வாறு கட்சி தாவுவதற்கு தயார் என்பது இன்னமும் நிரூபணமாகவில்லை. இடையிடையே இது குறித்து பேசிவந்த முன்னாள் அமைச்சர் ராஜீத சேனரத்னேவும் இப்போது பெட்டிப் பாம்பாக அடங்கிவிட்டார் என்றே எண்ணத் தோன்றுகிறது.

### புரியாத புதிர்

என்ன, சஜித் தரப்பில் இருந்து, கட்சியின் தவிசாளர், சரத் பொன்சேகா மாத்திரம், தானும் ஜனாதிபதித் தேர்தலில் தனித்துப் போட்டியிடப்போகிறார் என்று அவ்வப்போது அறிவித்து வருகிறார். அவரால் என்ன சாதித்துவிட முடியும், என்பதும் கேள்விக்குறியே. காரணம், இனப்போர் முடிந்த காலகட்டத்திலேயே, தமிழர் தரப்பின் ஆதரவு இருந்தும் அவரால் எதுவும் சாதிக்க முடியவில்லை.

பொன்சேகா, இனப்போர் முடிவுற்ற பின்னர், 2010 தேர்தலில் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிற்கு எதிராக அனைத்து எதிர்கட்சிகளின் பொது வேட்பாளராகப் போட்டியிட்டார். அன்று, பெருவாரி தமிழர்களின் தலைமைத்துவத்தை ஏற்றிருந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு, சரத் பொன்சேகாவிற்கு ஆதரவு நல்கியது. சம்மந்தன் தலைமையிலான கூட்டமைப்பின் இந்த முடிவு, விந்தையிலும் விந்தையானது. புரியாத புதிரும்கூட.

இனப்போரில் அப்பாவித் தமிழ் மக்கள் வேண்டுமென்றே கொல்லப்பட்டார்கள் என்றால், அதற்கு அரசியல் ரீதியாகவும், அரசு ரீதியாகவும், தார்மீக ரீதியாகவும் ஜனாதிபதி மகிந்த மற்றும் இராணுவ செயலாளரான அவரது இளைய சகோதரர் கோட்டபாய ஆகியோர் பொறுப்பேற்க வேண்டும். பொறுப்பு கூற வேண்டும். ஆனால், அந்த போர் முழுமைக்கும் இராணுவ தளபதியாகப் பதவி வகித்து, கடைசி நிமிடம்



முள்ளிவாய்க்கால் சம்பவங்களில் முழுமையாக முடிவெடுத்து செயல்படுத்திய சரத் பொன்சேகாவை தமிழர்கள் ஆதரித்தது, ஏற்றுக்கொள்ள முடியாத முடிவே.

ஒன்றில், ராஜபக்சக்கள் பொறுப்புகூறல் குற்றவாளிகள் என்றால், அவர்களைவிட ஒரு படி மேல் சென்று, பொன்சேகா குற்றவாளி. பொன்சேகா குற்றவாளி இல்லை என்றால், ராஜபக்சக்களும் நிரபராதிகளே. எப்போது, 2010 தேர்தலிலேயே, பொன்சேகாவிற்கு தமிழர்கள் பெருவாரியாக வாக்களித்தார்களோ, எப்போது அவர்களது அரசியல் தலைமைகள், பொன்சேகாவை ஜனாதிபதி வேட்பாளராக ஏற்றுக் கொண்டார்களோ, அப்போதே அவர் நிரபராதி ஆகிவிட்டார். அப்போதே ராஜபக்சக்களும் நல்லவர்கள் ஆகிவிட்டார்களா, என்ன?

### நல்லவர், வல்லவர்

தற்போதைய சூழலில், சுமந்திரன் 9 ஜீன் விவாதங்கள் எதையும் சாதித்துவிடும் என்று தோன்றவில்லை. ஏதோ ஒரு விதத்தில், தமிழ் பொது வேட்பாளர் என்ற முடிவு அங்கு தோன்றினால், அதனால் ஏதோ ஒரு விதத்தில், அனைத்து தரப்பினரிடையேயும் ஒற்றுமை தோன்றலாம். ஆனால், அதுவும் அடுத்த கட்டத்தில், யார் அந்த பொது வேட்பாளர் என்ற கேள்வியல் அடிபட்டு விடலாம்.

அதேநேரம் அவ்வாறு பொது வேட்பாளருக்கு ஆதரவாக முடிவு எடுக்கப்படாவிட்டால், ஒவ்வொரு கட்சியினரும் தங்களுக்கு என்று ஒரு தென்னிலங்கை வேட்பாளரை முன்னிறுத்தி, அவரையே நல்லவர், வல்லவர் என்றெல்லாம் பரப்புரை செய்வார்கள். இதில், சஜித் பிரேமதாசவிற்காகப் பேசுபவர்களுக்குப் பிரச்சினை இல்லை. ஏன், அனுரகுமார திஸநாயகவிற்கு ஆதரவாகப் பேசவும், பொருளாதாரக் கொள்கை ரீதியான ஒற்றுமை உள்ள ஒரு சில முன்னணி தமிழ் தலைவர்கள் முன் வரலாம். ஆனால், ராஜபக்சாகளுடன் தனது தேர்தல் கூட்டணியை தொடர்ந்து கொண்டே, தமிழர் வாக்குகளை கோரினால், ரணிலுக்கு ஆதரவான தமிழ் தலைவர்கள் வீட்டிலேயே முடங்கிவிட நேரிடும். அல்லது, பிறிதொரு வேட்பாளரை ஆதரிக்க வேண்டியிருக்கும்.

முடிவு எப்படியோ, வழக்கம் போல, ரணில், ஒருவருக்கு தலையையும் மற்றொருவருக்கு வாலையும் காட்டி, அனைவரையுமே குழப்பத்தில் ஆழ்த்தி உள்ளார். அவரது தற்போதைய அரசியல் விளையாட்டு, அவருக்குக் கைவந்த கலை. கை போன கலையும்கூட. காரணம், தனது ஐக்கிய தேசிய கட்சியின் முந்தைய காலகட்டத்தில், ரணில் நம்பகதன்மையை இழப்பதற்கு அவரது இந்த இரட்டை வேடமே காரணமாகும்.

மணிரத்தினம்-கமலஹாசன் படைப்பில் உருவான 'நாயகன்' திரைப்பட வரிகளில் கூற வேண்டுமானால், ரணில் 'நல்லவரா, கெட்டவரா?' என்பது அவருக்கே தெரியாது எனலாம். அவரை படைத்த ஆண்டவனுக்கு தெரிந்திருக்கலாம்!


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# கேப்பாபிலவில் சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம்

## சந்தேகநபர் கைது

முல்லைத்தீவில் சாப்பாட்டுக் கடை உரிமையாளரால் பாடசாலை சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

முல்லைத்தீவு கேப்பாபிலவில் உணவுக்கடை நடாத்திவரும் நபர் ஒருவரால் 14 வயதுடைய பாடசாலை மாணவி பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

குறித்த சிறுமியின் உடலில் திடீரென ஏற்பட்ட மாற்றத்தை அவதானித்த பெற்றோர் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு அழைத்து சென்று பரிசோதனைக்குட்படுத்தியதில் குறித்த சிறுமி மூன்று மாத கர்ப்பமாக இருந்தமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து குறித்த விடயம் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து விசாரணை மேற்கொண்ட முள்ளியவளை பொலிஸார் குறித்த சிறுமியின் நிலைக்கு காரணமான நபரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட குறித்த நபரை செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் முற்படுத்தியபோது எதிர்வரும் 6 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர் முல்லைத்தீவு கேப்பாபிலவில் உணவுக்கடை நடாத்தி வரும் 55 வயது மதிக்கத்தக்கவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

# அத்துருகிரிய விபத்தில் ஒருவர் பரிதாபச் சாவு

அத்துருகிரிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொழும்பு-மீதோட்ட வீதியில் ஹபரகடை பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்என அத்துருகிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு 5 பகுதியைச் சேர்ந்த 44 வயது நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பனாகொடயிலிருந்து அத்துருகிரியநோக்கிப்பயணித்தகெப்வண்டி ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்துவீதியைவிட்டுவிலகிஅருகில் இருந்தசுவரொன்றுடன்மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின்போதுகெப்வண்டியின் சாரதி பலத்த காயமடைந்துள்ள நிலையில் ஹோமாகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்எனப்பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரது சடலம் ஹோமாகம வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அத்துருகிரிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# கொழும்பில் மதுபோதையில் மோட்டார் சைக்கிளை செலுத்தி ஒருவரை மோதிய பொலிஸ் பரிசோதகர்

கொழும்புபிரதானவீதியில்மதுபோதையில்மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்று விபத்தை ஏற்படுத்திய பொலிஸ் பரிசோதகர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் பரிசோதகர் தனது கடமைகளை நிறைவுசெய்த பின் புதன்கிழமை காலை மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளார்.

இதன்போது, கொழும்பு பிரதான வீதியில் உள்ள ஹோட்டலுக்கு அருகில் நின்ற நபரை செலுத்திச் சென்ற மோட்டார் சைக்கிளால் மோதி காயப்படுத்தியதோடு, ஓட்டோ ஒன்றின் மீதும் மோதியுள்ளார்.

இந்நிலையில் பொலிஸ் பரிசோதகர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதன்போது, பரிசோதனையில் பொலிஸ் பரிசோதகர் மது அருந்தி இருந்தமை தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.(05)

# பெண்ணைக் கடத்தி கூட்டுப் பாலியல் தலைமறைவான சந்தேக நபர் கைது

தலைமறைவாக இருந்த சந்தேக நபர் ஒருவர் செவ்வாய்க்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மதுரங்குளிய கந்த தொடுவா பகுதியில் வைத்து இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இவர் குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடையவர் ஆவார் .

இவர் 2010ஆம் ஆண்டு பெண்ணொருவரை கடத்திச் சென்று கூட்டுப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் முந்தலம பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், புத்தளம் மேல் நீதிமன்றம் இந்த சந்தேக நபருக்கு 2015ஆம் ஆண்டு 15 வருடச் சிறைத்தண்டனை விதித்துத் திறந்த பிடியாணை பிறப்பித்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அப்போது, இந்த நபர் சுமார் 9 ஆண்டுகளாகச் சட்டவிரோதமாக வெளிநாட்டில் தங்கியிருந்துள்ளதுடன் பின்னர் நாடு திரும்பி கொழும்பு பகுதியில் தலைமறைவாகியுள்ளார் .

இந்நிலையில் இவர் மந்துரங்குளி பகுதிக்கு வந்தார் எனப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது . (05)

# பஸ்ஸில் பயணித்த இங்கிலாந்து பெண்ணின் பயணப் பொதி திருட்டு

பஸ்ஸில் பயணித்த இங்கிலாந்து பெண் ஒருவரின் பயணப் பொதி திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடொன்று கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பெண்ணொருவரே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளார்.

பிரபல யூடியூப் சேனல் ஒன்றை நடத்திச் செல்லும் இவர் பல்வேறு நாடுகளுக்குச் சென்று அந்நாடுகளின் சுற்றுலாத் தலங்களைக் காணொளிகளாக எடுத்து தனது யூடியூப் சேனலில் பதிவிடுவது வழக்கம்.

சுமார் 37 நாடுகளுக்குச் சென்றுள்ள இவர் இலங்கையின் சுற்றுலாத்தளங்களைக் காணொளிகளாக எடுப்பதற்காக கடந்த 24 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

இந்நிலையில், இவர் எல்ல பிரதேசத்திற்குச் செல்வதற்காகக் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்குச் சென்றுள்ள நிலையில் சீரற்ற காலநிலை காரணமாக ரயில் சேவை இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

பின்னர் இவர் பஸ்ஸின் மூலம் எல்ல பிரதேசத்தை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கும் போது அதே பஸ்ஸில் பயணித்த இருவர் இவரது பயணப் பொதியைத் திருடியுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தனது பயணப் பொதி திருடப்பட்டதை அறிந்துகொண்ட இவர், இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

இவரது பயணப் பொதியினுள் விமான பயணச்சீட்டு,கமரா , மடிக்கணினி மற்றும் 2,000 டொலர் பெறுமதியான பணம் உள்ளிட்ட பொருள்கள் காணப்பட்டன எனக் குறித்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில்,தனது பயணப் பொதியை கண்டுப்பிடித்துக்கொடுக்கும் நபர்களுக்கு 5,000 டொலர் பெறுமதியான பணப்பரிசு வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.(05)




# மாகாண சுகாதாரத்துறை நிர்வாகம் இறுக்கமாக செயற்படுதல் வேண்டும்

## யாழ் போதனா வைத்தியசாலையில் வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவிற்கான கட்டடம் திறக்கப்பட்டு 5 வருட பூர்த்தியை முன்னிட்டு கடந்த புதன்கிழமை ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் கலந்துக்கொண்டார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர்-

மருத்துவ துறையினர் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் தங்களின் சேவையை முன்னெடுத்து வருகின்றனர். அதேபோல சுகாதார அமைச்சின் செலவுகளுக்கே அதிகளவான நிதி தேவைப்படுகிறது. இந்நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பல்வேறு சிக்கல்கள் காணப்படுகின்றன.







இடப்பற்றாகுறை, கட்டட வசதியின்மை, ஆளணி பற்றாகுறை உள்ளிட்ட பலசிக்கல்களுக்கு மத்தியிலேயே சேவைகளை வழங்க வேண்டியுள்ளது. எனினும் மாகாணத்திலுள்ள ஏனைய வைத்தியசாலைகளில் இருந்து, வார இறுதி நாள்களில் நோயாளர்கள் யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்படுவதால் வைத்தியசாலை நிருவாகம் மேலதிக செலவுகளை சந்திக்க வேண்டியுள்ளது.

அந்தந்த பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகளில் நோயாளர்களுக்கு இயலுமான சிகிச்சைகள் வழங்கப்பட வேண்டும். இதன்காரணமாக நோயாளர்களும் சிரமங்களை எதிர்நோக்குவதுடன் அவர்களின் குடும்பங்களைச் சார்ந்தவர்களும் சிரமப்படுகின்றனர். ஆகவே, இந்த விடயம் தொடர்பில் மாகாண சுகாதார துறை நிர்வாகம் மிக இறுக்கமான நடவடிக்கைகளை பின்பற்ற வேண்டும்.

அதேபோல அரச நிறுவனங்களுக்குள் எவரும் அத்துமீறி பிரவேசிக்க முடியாது. இது தண்டனைக்குரிய குற்றம். கடந்த திங்கட்கிழமை யாழ் வைத்தியசாலையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். குறைகள் உரியவாறு சுட்டிக்காட்டப்பட வேண்டும். அந்த விடயங்கள் தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு தவறுகள் திருத்தப்பட வேண்டும்.

அத்துடன் ஊடகங்களும் எங்களுடன் இணைந்து பொதுமக்களுக்கான சிறந்த சேவையை பெற்றுக்கொடுக்க முன்வர வேண்டும். சிறந்த நண்பர்களாக எங்களுடன் ஊடகங்கள் பயணிக்கும் என நம்புகின்றேன். - எனக் கருத்துத் தெரிவித்தார். (05)

# 26 நாள்களில் 96,890 சுற்றுலாவிகள் வருகை

*மே மாதம் முதலாம் திகதி முதல் 26 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 96,890 சுற்றுலாவிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.*

*2024 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 881,541 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.*

*இந்நிலையில், மே மாதத்தின் முதல் 26 நாள்களில் 28.1 சதவீதமான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*அதன்படி, இந்தியாவிலிருந்து 27,274 சுற்றுலாப் பயணிகளும் மாலைதீவிலிருந்து 7,620 சுற்றுலாப் பயணிகளும் ஜெர்மனியிலிருந்து 6,938 சுற்றுலாப் பயணிகளும் ஐக்கிய இராச்சியத்திலிருந்து 6,935 சுற்றுலாப் பயணிகளும் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். (05)*

# வடக்கின் அபிவிருத்திக்குத் தேவையான ஒத்துழைப்பு பெற்றுக்கொடுக்கப்படும்

## கனேடிய உயர்ஸ்தானிகர் தெரிவித்தார்



வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸை இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஷ், கனடாவின் சர்வதேச அபிவிருத்திகளுக்கான பிரதி அமைச்சர் கிரிஸ்டோபர் மக்லணன் உள்ளிட்ட குழுவினர் புதன்கிழமை சந்தித்து கலந்துரையாடினார்கள். வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

நல்லிணக்கச் செயற்பாடுகள், மீள்குடியேற்றம், கண்ணிவெடி அகற்றல், காணிவிடுவிப்பு, கல்வித்துறை மேம்பாடு, தொழில்முனைவோருக்கான ஒத்துழைப்புகள்



உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

கல்வி முறையில் மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டும் அதற்கான மாதிரி செயற்பாடுகளை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாகவும் ஆளுநர் தெரிவித்தார் . ஜனாதிபதி கடந்த வாரம் வடக்கிற்கு விஜயம் செய்தபோது, வைத்தியசாலைகளுக்கான புதிய பிரிவுகளை திறந்துவைத்ததுடன், பட்டதாரிகளுக்கான ஆசிரியர் நியமனங்களையும், மக்களுக்கான காணி உறுதிகளையும் வழங்கி வைத்தார். இதனூடாக வடக்கு மாகாண மக்களுக்கு சிறந்த கல்வி மற்றும் சுகாதார சேவை மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

காணி உறுதிகளை வழங்கியமையால் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கும், பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கும் அதிக நன்மைகள் கிட்டும் எனத் தெரிவித்த ஆளுநர் தொழில் முயற்சியாளர்களுக்கான தொழில்நுட்ப ஒத்துழைப்புகளும், கடன்வசதிகளும் தேவைப்படுவதாகக் கூறினார்.

இந்த விடயங்களை கேட்டறிந்த கனேடிய தூதுக்குழுவினர் வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கு தேவையான ஒத்துழைப்புகளை பெற்றுக்கொடுக்க தாம் தயாராக உள்ளதாகத் தெரிவித்தனர். (05)

## ரஷ்ய....

(,ற்கு;யிஜுவ; பக்கத்தொடர்ச்சி)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட கவனம் செலுத்தியுள்ளார். கொழும்பில் உள்ள ரஷ்ய தூதகரத்துடனும், மொஸ்கோவில் உள்ள இலங்கை தூதரகத்துடனும் விரிவான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ரஷ்யாவுக்குசென்றுள்ளஇலங்கையர்கள் தொடர்பில் பல பொய்யான செய்திகள் வெளியாகியுள்ளதை அவதானிக்க முடிகிறது. ரஷ்யாவில் நெருக்கடிக்குள்ளாகியுள்ளவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை என்று எதிர்க்கட்சியினர் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்.

அத்துடன் ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள அரசு தீர்மானித்துள்ளதாக வெளியாகியுள்ள செய்தியும் பொய்யானவை.உதயங்க வீரதுங்க தொடர்பில் எவ்விதமான தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை.

விசிட் விசாவில் ரஷ்யாவுக்கு சென்றவர்கள் தாம் யுத்தக்களத்தில் பணிக்கமர்த்தப்படுவதை அறியவில்லை என்று குறிப்பிடுகிறார்கள். இரண்டாம் தர சேவைகளுக்காகச் சென்றோம் எனவும் குறிப்பிடுகிறார்கள். போலியான வாக்குறுதிகளினால் இவர்கள் ஏமாற்றப்பட்டுள்ளார்கள். மனித கடத்தல் வியாபாரத்துடன் தொடர்புடைய நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். குற்றப்புலனாய்வுதிணைக்களத்தி;ன் ஊடாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ரஷ்ய போர்க் களத்துக்கு சென்றவர்களில் 16 இலங்கையர்கள் காணாமல் போயுள்ளனர்.37 பேர் காயங்களுக்குள்ளாக்கப்பட்டு சிகிச்சைப் பெறுகிறார்கள். உயிரிழந்தவர்கள் தொடர்பான முழுமையாக தகவல்கள் இதுவரை கிடைக்கவில்லை.

இலங்கையர்கள் ரஷ்யாவில் நெருக்கடிக்குள்ளாகியுள்ள விவகாரத்துக்கு உடன் தீர்வு காண்பதற்கு கொழும்பில் உள்ள ரஷ்ய தூதரகம் இணக்கம் தெரிவித்துள்ளது. ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சுடன் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை நிகழ்நிலைமை ஊடாக பேச்சு நடத்தவுள்ளோம்.

அத்துடன் இலங்கையர்கள் ரஷ்யாவுக்கு முறையான காரணிகள் இல்லாமல் செல்வதை தற்காலிகமாக நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இலங்கையர்கள் குறிப்பாக ஆண்கள் ரஷ்யாவுக்கு செல்வதாக இருந்தால் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியை பெற வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

போரில் ஈடுபடுவதற்காக தாம் ரஷ்யாவுக்கு செல்லவில்லை என்று அங்கு நெருக்கடிக்குள்ளாகியுள்ள இலங்கையர்கள் குறிப்பிடுகிறார்கள். ஆகவே இவர்களை போர்க் களத்துக்கு அனுப்புவதை தவிர்த்துக் கொள்ளுமாறு ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சிடம் வலியுறுத்தவுள்ளோம்.

இலங்கையின் விசேட குழுவினர் எதிர்வரும் ஐந்தாம் திகதி ரஷ்யாவுக்கு செல்லவுள்ளனர். காயமடைந்துள்ள 37 இலங்கையளர்களை முதற்கட்டமாக நாட்டுக்கு அழைத்து வர பேச்சு நடத்தப்படுகின்றன. பலவந்தமான முறையில் போரில் ஈடுபடும் தரப்பினர் மற்றும் இலங்கைக்கு மீண்டும் வருகை தர விரும்பும் தரப்பினரை நாட்டுக்கு அழைத்துவர ரஷ்யாவின் பாதுகாப்பு மற்றும் வெளிவிவகாரத்துறை அமைச்சுடன் பேச்சு நடத்தவுள்ளோம் என்றார்.

## தேர்தல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*பதிலளிப்பேன் என பாலிதரங்க பண்டார தெரிவித்துள்ளார்.*




காலைக்கதிர் Kalaikkathir

# கார்த்திகை மலர் பொறிக்கப்பட்ட பாதணிகளை மீளப்பெற அதிகாரத்தை பயன்படுத்துவார்களா?

## பொலிஸ் மா அதிபரிடம் வினவியுள்ள அருட்தந்தை மா.சத்திவேல்

கார்த்திகை மலர் மிதிபடும் ஒன்றாக்கியதன் மூலம் தமிழர்களின் அரசியலை மிதித்தழிப்போம் என பகிரங்கமாகவே கர்ஜிப்பதாகவே உள்ளது என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

இலங்கையின் பிரபல பாதணி உற்பத்தி நிறுவனமான டி.எஸ். ஐ கம்பெனி அண்மையில் சந்தைப்படுத்தியுள்ள தனது உற்பத்தி ஒன்றில் கார்த்திகை மலரை பதிவிட்டுள்ளது. இது இலங்கையின் பேரினவாத அரசியல் முதலாளித்துவத்தையும் எந்த அளவிற்கு ஆக்கிரமித்துள்ளது என்பதைக் காட்டுவதோடு தமிழர்களின் அரசியல் அடையாளங்களில் ஒன்றான கார்த்திகை மலரை மிதிபடும், மிதிக்கப்படும் ஒன்றாக்கியதன் மூலம் தமிழர்களின் அரசியலை மிதித்தழிப்போம் என பகிரங்கமாகவே கர்ஜிப்பதாக உள்ளது. இதனை வன்மையாகக் கண்டிப்பதோடு தமிழ் உணர்வு மிக்க தேசப்பற்றார்கள் இதற்கு தகுந்த பாடத்தை வெளிப்படுத்த வேண்டும்.

யாழ் தெல்லிப்பழையில் பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி ஒன்றில் இம் மலர் அலங்காரத்துக்கு பாவிக்கப்பட்ட போது அப்பாடசாலையில் அதிபர் உட்பட ஆசிரியர்களை பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தினர். இதே போன்று மேற்படி குறித்த பாதணி கம்பனியின் திட்டமிடல் வடிவமைப்பு சந்தைபடுத்துநர்கள், விற்பனை முகவர்கள் என பலதரப்பினரையும் பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்துவார்களா? சந்தையில் விற்பனைக்கு விடப்பட்டுள்ள பாதணிகளை மீளப்பெற அதிகாரத்தைர் பயன்படுத்துவார்களா? என பொலிஸ் மா அதிரைக் கேட்கிறோம்.

கடந்த ஒரு கிழமைக்கு முன்னர் கிழக்கில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பகிரப்பட்ட போது சுகாதாரத்தைக் காரணம் காட்டி அதனை தடுத்து நிறுத்தி அடவாடித்தனம் புரிந்த பொலிஸார், அதற்கடுத்து கடந்த கிழமை வெசாக் பண்டிகை காலத்தில் அதே சுகாதாரத்தை காரணம் காட்டி எந்த ஓர் உணவு பகிர்களையும் தடுத்து நிறுத்தியதாக அடவாடித்தனம் புரிந்ததாகச் செய்திகள் வரவில்லை. இது தமிழர்களுக்கு ஒரு நீதி சிங்கள பௌத்தர்களுக்கு ஒரு நீதி எனும் பௌத்த பேரனவாதத்தின் அரசியலை வெளிப்படுத்தியது.

ஓர் உற்பத்தி நிறுவனம் தன்னுடைய நீண்ட கால கள ஆய்வில் மக்களின் மனநிலையை அறிந்த பின்னரே உற்பத்தியை வடிவமைக்கும். சந்தையில் விற்பனைக்கு விடும். அவ்வாறெனில் டி. எஸ்.ஐ கம்பெனி நீண்ட கால திட்டமிடலின் அடிப்படையில் காலணியில் கார்த்திகை மலரை அடையாளப்படுத்தி உற்பத்தி செய்து சந்தைப்படுதைக்கு விட்டுள்ளது எனில் இலாபத்திற்கு அப்பால் அதன் அரசியல் நோக்கம் தெளிவானது. தமிழர்களை அடக்கி ஒடுக்கி அரசியல் ரீதியாக துவம்சம் செய்வோம் எனும் பேரினவாத மனநிலையை மக்கள் மயப்படுத்தி தமது அரசியல் கூலித்தன்மையை வெளிப்படுத்தி உள்ளது எனலாம்.

அரச திணைக்களங்கள், சிங்கள பௌத்த பிக்குகள் தமது பேரினவாத செயற்பாட்டுக்குள் இழுத்து தமிழர்களின் நிலைகளை பறித்து ஆக்கிரமிக்கும் ஆட்சியாளர்கள் தனியார் உற்பத்தி நிறுவனங்கள் வேலைத் தளங்கள் என்பவற்றையும் தமது அரசியலுக்கு பாவிக்க தொடங்கிவிட்டனர் என்பதையே டி. எஸ். ஐ கம்பெனி வெளிப்படுத்தி உள்ளது.

பேரினவாதம் பலம் வாய்ந்த ஒன்றாகக் கட்டமைக்கப்பட்டு பல்வேறு முகங்களில் கிளைகளை பரப்பி சிங்கள பௌத்த அரச மரம் போல் வியாபித்திருக்கின்றது என்பதை நாம் உணர வேண்டும். இதற்கு தமிழர் தேசிய கொள்கை உருவாக்கிகள், பரப்புரையாளர்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள், சிவில் சமூகத்தினர் எவ்வாறு பதில் அளிக்கப் போகின்றனர்?

தமிழ்த் தேசிய சிந்தனையாளர்கள் ஒன்றிணைய வேண்டும், மக்கள் திரட்சி கொள்ள வேண்டும், அடுத்த தேர்தலுக்கு மக்களை ஆயத்தப்படுத்த வேண்டும் என்று கூறுவார்கள் உடனடியாக பாதணி விடயத்தில் தலையிட்டு அரசுக்கும் கம்பெனிக்கும் தமது எதிர்ப்பை வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் வெளிக் காட்டுதல் வேண்டும்.

எமது எதிர்ப்பு பாதணிக்கும், பாதணி கம்பெனிக்கும் எதிரானது மட்டுமல்ல. அது அதற்குப் பின்னால் இருக்கும் அரசியலுக்கும் அதன் சக்திகளுக்கும் எதிரானதுமாகும். பல லட்சம் உயிர்கள் எமது அரசியலுக்காக கொல்லப்பட்ட பின்னரும் எமது அரசியலை கைவிடாத தேசமாக ஒன்று திரண்டு எதிர்ப்பு காட்ட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இந்தச் சந்தர்ப்பத்தில் அமைதி காப்போம் எனில் எமது அரசியலுக்கு நாமே எதிரிகளாவோம். - என்றுள்ளது.(05)

# யாழ். போதனா வைத்தியசாலை அசம்பாவிதம் தொடர்பில் அமைச்சர் டக்ளஸின் அறிவுறுத்தல்

யாழ்போதனாவைத்தியசாலையின்மகிமையையும் ஊழியர்களின் பாதுகாப்பையும் கருதி அடாவடியில் ஈடுபடுபட்ட நபர்களுக்கு கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இனிவரும் காலத்தில் இவ்வாறான அச்சுறுத்தல்கள் ஏற்படாத வகையிலான முன்னுதாரணமாககுறித்தநடவடிக்கைஇருக்கவேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார்.

அண்மைக் காலமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றுவரும் அசம்பாவிதங்கள் தொடர்பில்அமைச்சர்டக்ளஸ்தேவானந்தாதலைமையில் நடைபெற்ற யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் நேற்று (வியாழக்கிழமை) ஆராயப்பட்டது.

இதன்போது வைத்தியசாலை பணிப்பாளர் மற்றும் பொலிஸார் ஆகியோரிடம் அது குறித்து விளக்கம் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் கேட்டறிந்தபின் கருத்து கூறுகையிலேயே இவ்வாறு வலியுறுத்தியிருந்தார்.

இதன்போதுயாழ்.வைத்தியசாலைஅசம்பாவிதங்கள் குறித்து கருத்துக்கூறிய பணிப்பாளர் சத்தியமூர்த்தி - வைத்தியசாலைக்கு நாளாந்தம் குறைந்தது 5000 இற்கும் அதிகமானவர்கள் அவசர நோயாளர் பிரிவுக்கு பல்வேறு அவசர உயிர் காப்பு தேவை கருதி வருவதுண்டு.

அதுமட்டுமல்லாது இவ்வாறு வருபவர்கள் பலவகையானவாகனங்களில்வருகைதருவதால்உயிர்பாதுகாப்பை கருதி தடையின்றி உள்ளே அனுமதிப்பது வழமை.

அந்த இளக்கமான நடைமுறையை தமக்கு சாதகமாக ஒருசிலர் பயன்படுத்துவதால்தான் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றன. அதே நேரம் இவ்வாறான சம்பவங்களை வைத்து அவசர நோயாளர் பிரிவு நுழைவாயிலில் இறுக்கமான நடைமுறையைக் கொண்டுவரவும் முடியாது.

அந்தவகையில் வைத்தியசாலையின் பாதுகாப்பு அதன் மகிமைகள் குறித்து இளைஞர்கள் அதிக கரிசனை எடுப்பதனூடாகவே இவ்வாறான துர்ப்பாக்கிய நிலையைக் கட்டுப்படுத்தலாம். இதற்கு அனைவரது குறிப்பாக இளைஞர்களது ஒத்துழைப்பும் அவசியம் என்றும் கூறியிருந்தார்.

அத்துடன் சம்பவத்தில் ஈடுபட்டவர்களை கடுமையான பிரிவுகளில் சட்டத்தின்முன் நிறுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் வைத்தியசாலையின் பாதுகாப்பில் பொலிஸாரின் பங்கு அதிகளவில் இருக்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ள அமைச்சர் பொதுமக்களும் வைத்தியசாலையின் பாதுகாப்பு மற்றும் நலன்களில் அக்கறை கொள்வது அவசியம்.

இதேநேரம் சட்டத்தை கடுமையாக நடைமுறைப் படுத்துவதன்மூலம் இனிவருங் காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் ஏற்படாதவகையில் நடவடிக்கை அமைவதும் அவசியம் என்றும் உரிய தரப்பினருக்கு அறிவுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(05)

# ஏறாவூர் கிராமத்தில் தாய் கைது குழந்தைகளைத் தாக்கினாராம்



கடந்த செவ்வாய்க்கிழமை ஏறாவூர் சாதாட் கிராமத்தில் 7 வயது சிறுவனை தலைகீழாக கட்டி தொங்கவிட்டு தாக்கிய சம்பவத்துடன் தொடர்புடைய 35 வயதுடைய குறித்த சிறுவனின் தாய் ஏறாவூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

பின்னர் குறித்த பெண்ணின் 24 வயதுடைய சகோதரரும் ஏறாவூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு புதன்கிழமை இருவரையும் ஏறாவூர் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்திய போது எதிர்வரும் 6 ஆம் மாதம் 12 ஆம் திகதி வரை இருவரையும் விளக்கமறியலில் வைக்கநீதிவான்உத்தரவிட்டுள்ளார் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள இரண்டு சிறுவர்களையும் ஏறாவூர் ஆயிஷாலு அபூபக்கர் சித்திக் சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கிளிநொச்சியில் கவனவீர்ப்பு போராட்டம்







வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று (வியாழக்கிழமை) கிளிநொச்சியில் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அருகில் உள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்க அலுவலகத்திற்கு முன்பாக ஏ9 வீதியில் குறித்த கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



தமது காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளின் படங்களையும் பதாகையும் தாங்கியவாறு சர்வதேச விசாரணைவேண்டும்எனகோசங்களைஎழுப்பியவாறு கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.(05)

# ஓட்டோ - பஸ் மோதி விபத்து

## 3 வருடங்களின் பின் வீடு திரும்பிய பெண் சாவு

பெல்மடுல்ல பகுதியில் ஓட்டோவுடன் பஸ் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. குறித்த விபத்தில் வீதியை விட்டு விலகிய ஓட்டோ 15 அடி பள்ளத்தில் வீழ்ந்துள்ளது.

இந்த விபத்தில் ஓட்டோவில் பயணித்த உயிரிழந்த பெண் உட்பட மூன்று பயணிகளும் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் பஸ்ஸில் பயணம் செய்த 10 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் பெல்மடுல்ல, கஹவத்த மற்றும் இரத்தினபுரி வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அங்கு அனுமதிக்கப்பட்டிருந்தவர்களில் பலத்த காயமடைந்த பசறை பிரதேசத்தை சேர்ந்த 26 வயதுடைய ஒரு பிள்ளையின் தாயே பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

ஏறக்குறைய 03 வருடங்களாக குவைத்தில் பணிபுரிந்துவிட்டு தனது வீட்டிற்கு திரும்பிக் கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

அவர்களின் சடலங்கள் இரத்தினபுரி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir




# நல்லூர் கந்தசுவாமியாருக்கு மணவாளக்கோலம்



மகாபாரதத்தில் வன பர்வதத்தில் உள்ள ஸ்கந்தப்பெருமானின் திருநாம ஸ்தோத்திரத்தில் 'ரேவதீஸுத'(ரேவதியின் புதல்வன்) என்றொரு திருநாமம் குமரக்கடவுளுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஷஷ்டீப்ரியஸ்ச தர்மாத்மா
பவித்ரோ மாத்ரு வத்ஸல:
கந்யாபர்த்தா விபக்தஸ் ச
ஸ்வாஹேயோ ரேவதீஸுத:

எதிர்வரும் 02.06.2024 ஞாயிற்றுக்கிழமை வைகாசி ரேவதி. இத்தகு ரேவதி நக்ஷத்திரம் வைகாசி மாதத்தில் சேரும் இனிய நாளில் தான் நல்லை கந்தவேளுக்கு மஹாகும்பாபிஷேகம் நிகழ்ந்தது.

வட இலங்கையில் உள்ள ஸ்தலங்களில் நல்லைக் குமரவேளின் பேராலயம் பெறும் முதன்மை தவிர்க்க இயலாது. தங்கவிமானம் கொண்ட இத்தலத்தில் காஞ்சி மா தல விருக்ஷமாக காணப்படுகிறது.

யாழ்ப்பாண அரசர் கால வரலாற்றோடு தொடர்பு படுத்தப்படும் இத்திருத்தலம் தொண்டைமண்டல முதலியார் மரபினரால் மிகச்சிறப்பாக பரிபாலனம் செய்யப்படுகிறது.

இரகுநாதமாப்பாண முதலியார் மற்றும் கிருஷ்ணையர் என்று ஸ்ரீ ராமர், கிருஷ்ணர் என்ற இரண்டு முக்கிய திருவவதாரப் பெயர்களை உடைய பெரியவர்கள் இணைந்ததன் பேறாக 1730 களில் இன்றுள்ள இத்தலம் ஸ்தாபிக்கப்பட்டது.

இந்த ஸ்தலத்தில் சில தனித்துவமான அம்சங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அவ்வகையில் இத்தலத்தில் அண்மையில், சம்ப்ரோக்ஷண கும்பாபிஷேகம் 120 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்றுள்ளது.

முதலியார் குல. சபாநாதன் அவர்கள் எழுதி 1971ல் தேவஸ்தானம் வெளியிட்ட'நல்லூர் கந்தசுவாமி' நூலின் படி, இந்த கும்பாபிஷேகம் ஆறுமுக மாப்பாண முதலியார் காலத்தில், மூலஸ்தானம் கற்றளியாக அமைக்கப்பெற்று 1902ல் இந்த கும்பாபிஷேகம் இடம்பெற்றுள்ளது.

மற்றைய ஆலயங்கள் போல குறித்த ஆண்டுகளுக்கு ஒருமுறை முழுமையான பிரதிஷ்டா கும்பாபிஷேகம் செய்யும் மரபு நல்லூரில் இல்லை. கோபுரங்கள், விமானம் ஆகியவற்றுக்கு தான் கும்பாபிஷேகம் நடந்திருக்கிறது.

எனவே அந்த 1902 மஹாகும்பாபிஷேகம் நிகழ்ந்த நாளான வைகாசி ரேவதி நாளில் நல்லூர் கந்தவேளுக்கு மஹா (சஹஸ்ர) சங்காபிஷேகமும் மாலையில் திருக்கல்யாண வைபவமும் இடம்பெற்று வருகிறது.

மகத்துவம் மிக்க இந்நாளை ஒட்டி கோயில் வழமையை விட வாழை, தோரணங்களால் விசேஷமாக அலங்கரிக்கப்படுவதும், ஷண்முக நாதக் கடவுள் பூந்தண்டிகையில் திருவீதி எழுந்தருளி உலாக் காண்பதும் வழமை.

கயிற்றசிட்டிக்கந்தன், நீர்வை கதிர்காமக்கந்தன் ஆகிய வேறு சில முருகன் கோயில்களிலும் ரேவதி நாளே கும்பாபிஷேக நாளாக கொள்ளப்படுகின்றது.

இந்த நாளை தமிழகத்தில் அபிஷேக முதன்மையாக வருஷாபிஷேகம் அல்லது சம்வத்சராபிஷேகம் என்பர். நம் தேசத்தில் அன்று இறைவன் திருமணக்கோலத்தில் காட்சி தருவதை முதன்மையாகக் கொண்டு மணவாளக்கோலம் என்பர்.


ரேவதி சுதனான பெருமான் இத்திருநாளில் எங்கள் பாபங்களையும் குற்றங்களையும் மன்னித்து, எங்கள் துயரங்களையும், வலிகளையும் விலக்கி கருணையோடு காக்க பிரார்த்திப்போம். அவனன்றி எம்மைக் காக்க வேறு யார் உளர் ?

ஹேம மண்டித மந்திர நாயக
வம்ஸ விவர்த்தன தேவ பதே
காம பலப்ரத வல்லிமந: ப்ரிய
யோக ஸு வந்தித சக்தி பதே
நாம பராயண நல்லூர் நிவாஸக
ரகு குரு பூஜித ஹ்ருஷ்டமதே
ஜய ஜய ஹே சிவ ஷண்முக ஸுந்தர
சரவணபவ குஹ பாலயமாம்

தங்கமயமான, (தங்க விமானமும், வாகனங்களும், தங்க கலசங்கள் நிறைந்த கோபுரங்களும் நிறைந்த ) ஆலயத்தில் எழுந்தருளியிருப்பவரே!

சந்ததியை காக்கின்ற பெருமானே! நன்மையே புரியும் தேவர்களின் தலைவனே!

விருப்பங்களை நிறைவேற்றும் கடவுளே! வள்ளி




தேவியின் மனத்துக்கு விருப்பமான மணாளரே!

சிவயோக மாமுனிவரால் வழிபடப்பெற்றவரே! சக்தியாகிய வேல் வடிவமாக காட்சி அருளும் பெருமானே!

திருநாமங்களை பாராயணம் செய்வதால் மகிழ்பவரே! (தினம் தினம் ஷண்முகார்ச்சனை செய்யப்படுவதால் மகிழ்பவரே!)

நல்லைத்திருத்தலத்தே உறையும் எம் கடவுளே!

ஒளி பொருந்திய குரு பகவானான வியாழனின் பூசை ஏற்று இதயத்தே மகிழ்ச்சி கொண்டவரே

( முன்பு அரசர்களால் அமைக்கப்பட்ட ஆலயம் முற்றாக அழிந்த பின், பொ.பி 1849 அளவில் இரகுநாத மாப்பாண முதலியார் அவர்களாலும், குருமார்களாலும் (கிருஷ்ணையர்) பூசிக்கப்பட்டதால் இதய மகிழ்ச்சி கொண்டு அவர்கள் பிரதிஷ்டித்த இடத்தில் எழுந்தருளியிருப்பவரே!)

எம் இறைவா! வெல்க ! வெல்க!! ஆறுமாமுகத்து ஆதியே! அழகின் வடிவினரே! ஆறெழுத்துப் பெருமானே! அடியார் உள குகையிலுறையும் பகவானே! என்னைக் காத்தருள்புரிய வேண்டும்!!

**குகஶ்ரீ. தி.மயூரகிரி சிவாச்சார்யார்**

# நம்பிக்கை தரும் தன்னம்பிக்கை

எந்த சூழ்நிலையிலும் தளராத உள்ளம் கொண்டவனுக்கு இந்த உலகில் முடியாதது என்று எதுவுமில்லை. பிறர் மீது நாம் வைக்கும் பற்று நம்பிக்கை ஆகும். நம்மீது நாமே வைக்கும் நம்பிக்கையே தன்னம்பிக்கையாகும்.

வாழ்வில் ஜெயிக்க வேண்டுமெனில் தன்னம்பிக்கை அவசியம். மனித வாழ்வானது இன்பம் - துன்பம் இரண்டும் இரண்டறக் கலந்தது. தோல்விகள் பல அடையக்கூடும்'அவமானங்களைச் சந்திக்க நேரிடலாம்' கஷ்ட துன்பங்களுக்கு முகம் கொடுக்க வேண்டி வரலாம்' இவற்றையெல்லாம் எதிர்நீச்சல் போட்டு வெற்றி கொள்ள தன்னம்பிக்கை அவசியமாகும். வாழ்வில் முன்னேற்றம் காண வேண்டுமெனில் தன்னம்பிக்கை முக்கியமாகும். தன்னம்பிக்கையின்றிச் சாதனைகள் செய்திட முடியாது.

நாம் நம்பிக்கையோடும் தன்னம்பிக்கை கொண்டும் ஒரு செயலைச் செய்கின்ற போது வெற்றியை நமதாக்கிக் கொள்ள முடியும். தன்னம்பிக்கை நமக்கு இருக்கும்போது மற்றவர்களின் தயவின்றி வாழ்வில் முன்னுக்கு வரமுடியும். வாழ்வின் தடைகளைத் தகர்த்தெறிய முடியும். பிரச்சினைகளை எதிர்கொண்டு அதனை தீர்த்துக்கொள்ள தன்னம்பிக்கை உதவுகின்றது. நம்பிக்கை தரும் தன்னம்பிக்கையால் எமக்குள் ஒளிந்திருக்கும் பலத்தை வெளிக்கொண்டுவர முடியும்.

நம்மீது நாமே நம்பிக்கை கொள்ள வேண்டும். நம்பிக்கையை எப்போதும் கைவிடக்கூடாது. என்னால் முடியும் என்ற நம்பிக்கையை வளர்த்துக்கொள்ள வேண்டும். சோர்ந்து போகும் நேரங்களில் கடந்தகால வெற்றிகளை நினைவிற் கொள்ள வேண்டும். தாழ்வு மனப்பான்மையை எப்போதும் மனதில் எழவிடாமல் நேர் நிலைகருத்துக்களை மனதிற் கொள்ள வேண்டும். விமர்சனங்களை ஏற்றுக் கொள்ளப் பழக வேண்டும்.

பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க முன்வர வேண்டும். அப்போதுதான் நாளடைவில் அதை எதிர்கொள்ள முடியும். மன்னிக்க கற்றுக் கொள்ள வேண்டும்.

தன்னம்பிக்கைப் பொன்மொழிகள்

- வெற்றி எனும் உயரத்தை அடைய ஏணியாக இருக்கும் ஆயுதம் தான் தன்னம்பிக்கை அதை எப்போதும் வளர்த்துக் கொள்
- கஷ்டங்கள் மட்டும் இல்லையெனில் போராடும் எண்ணமே நமக்கு இல்லாமல் போய்விடும்
- தடம் பார்த்து நடப்பவன் மனிதன் தடம் பதித்து நடப்பவன் தான் மாமனிதன்
- வாழ்க்கையில் முன்னேற குன்றாத உழைப்பு, குறையாத முயற்சி,வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை இம்மூன்றும் இருந்தால் போதும்.
- நல்லதே நடக்கும் என்று நம்புங்கள் அது உங்களை மட்டுமல்ல உங்களைச் சுற்றி இருப்பவர்களையும் மகிழ்ச்சியாய் வைத்திருக்கும்.

வாழ்வில் முன்னேற தன்னம்பிக்கை அவசியம். அத்தகைய தன்னம்பிக்கையைத் தருவது நம்பிக்கையாகும். உலகின் சாதனையாளர்கள் தன்னம்பிக்கையைக் கைவிடாமல் தான் வாழ்வில் முன்னேறியுள்ளனர். தோல்விகளைக் கண்டு சோர்வடையாத தன்னம்பிக்கை கொண்டு மீண்டெழுந்தவர் தான் டாக்டர் அப்துல் கலாம் ஐயா அவர்கள். எனவே தன்னம்பிக்கையின் சின்னமாகத் தனியொருவனாக உழைத்து வாழ்வில் முன்னேறுவோம்.

**தெய்வேந்திரம் வஜிதா**
**அறநெறி ஆசிரியர்**

காலைக்கதிர் Kalaikkathir

# திருவடிநிலை காணி அளவீடுப் பணி மக்கள் எதிர்ப்பால் கைவிடப்பட்டது







யாழ். சுழிபுரம் திருவடிநிலை காட்டுப்புலத்தில் கடற்படை முகாமிற்காக காணி சுவீகரிப்பு இடம் பெறவிருந்தநிலையில், மக்கள்பிரதிநிதிகள், பொதுமக்கள், காணி உரிமையாளரின் எதிர்ப்பையடுத்து அந்த காணி சுவீகரிப்பு செயற்பாடு கைவிடப்பட்டது.

கடற்படையினரின் காணி சுவீகரிப்புக்காக சுழிபுரம் காட்டுப்புலம் பகுதியில் உள்ள 4 பரப்பு தனியார் காணியை அளப்பதற்காக திணைக்களத்தினர் காட்டுப்புலத்துக்கு வருகை தந்தபோது தடுத்து நிறுத்தப்பட்டனர்.


இந்நிலையில் தாம் திரும்பிச் செல்வது தொடர்பில் மேலதிகாரிக்கு அறிவிக்க வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

இதனையடுத்து இலங்கை தமிழ் அரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மேலதிகாரியுடன் தொடர்புகொண்டு பொதுமக்களின்எதிர்ப்புபற்றிதெரிவித்தார். இந்நிலையில் திணைக்களத்தினர் காணியை விட்டு திரும்பிச் செல்ல மேலதிகாரியால் உத்தரவிடப்பட்டது.

தொடர்ந்து சட்டத்தரணி சுகாசினால் உரிமை யாளர்களின் எதிர்ப்பு கடிதமும் பாரப்படுத்தப்பட்டதை தொடர்ந்து அவ்விடத்தை விட்டு நில அளவை திணைக்களத்தினர் அகன்று சென்றனர்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் கஜேந்திரன், ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், பொதுமக்கள் என பலரும் களத்தில் இருந்தனர்.(05)

# ஊடகவியலாளர் நடேசனின் 20ஆவது ஆண்டு நினைவு




மட்டக்களப்பில் படுகொலை செய்யப்பட்ட சிரேஸ்ட ஊடகவிய லாளர் நாட்டுப்பற்றாளர் ஐயாத் துரை நடேசனின் 20 ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்று (வெள்ளிக்கிழமை) மாலை 4.30 மணியளவில் மட்டக்களப்பு காந்தி பூங்காமுன்றிலில்நடைபெறவுள்ளது.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடை பெறவிள்ள இந்த நினைவேந்தலில் இலங்கை தொழில் சார் இணைய ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் வடக்கு, கிழக்கு ஊடக அமைப்புக்கள் உட்பட பலதரப்பினர் பற்கேற்கவுள்ளனர்.

இந்த நினைவேந்தல் அனுஷ் டிக்கப்பட்டதன் பின்னர், இலங் கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி போராட்டமும் இடம்பெறவுள்ளது.

இதில் ஊடகவியலாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், மதத்தலைவர்கள், மக்கள் பிரதிநி திகள், பொதுமக்கள், பொது அமைப்புகளையும் கலந்துகொள் ளுமாறு அழைப்பு விடுக்கப்பட் டுள்ளது.

2004ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம்திகதி தனது அலுவலகத்துக்கு சென்றுகொண்டிருந்தபோது மட்டக்களப்பு எல்லை வீதியில் வைத்து சிரேஸ்ட ஊடகவியலாளர் நடேசன் சுட்டுக்கொல்லப்பட்டார். (05)

# எமக்கு சர்வதேச விசாரணையே வேண்டும் காணாமலாக்கப்பட்ட உறவுகள் போராட்டம்

## மன்னாரில் நேற்று நடந்தது





யுத்தம் முடிந்து சுமார் 15 வருடங்கள் கடக்கின்ற போதும் தமிழ் மக்களுக்கு தீர்வு பெற்றுத் தராத அரசு, தமிழர்களுக்கு ஒரு சரியான, நிரந்தரமான தீர்வைத் தரும் என்பதில் எவ்வித நம்பிக்கையும் இல்லை. எனவே, காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் எமக்கு சர்வதேச விசாரணை ஒன்றே தேவை என போராட்டத்தில் ஈடுபட்ட மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவி மனுவல் உதயச்சந்திரா தலைமையில் நேற்று (வியாழக்கிழமை) காலை 10 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன் போராட்டம் இடம்பெற்றது.

பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டவர்களே மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் -

காணாமலாக்கப்பட்ட எம் உறவுகளைத் தேடி நாங்கள் 15 வருடங்களாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறோம். அரசாங்கம் இதுவரை எமக்கு உரிய தீர்வு வழங்கவில்லை.

தமிழ் மக்களுக்கு தொடர்ந்தும் கோபத்தை ஏற்படுத்தும் வகையில் இந்த அரசாங்கம் செயல்பட்டு வருகிறது. மேலும் கலப்பு நீதிமன்றத்தின் ஊடாக தீர்வு வழங்கப்படும் என அரசு கூறுகிறது.

எமக்கு கலப்பு நீதிமன்றத்தில் நம்பிக்கையே இல்லை. எமது ஒரே முடிவு, சர்வதேச விசாரணையே எமக்கு தேவை. வேறு எந்த தீர்விலும் எமக்கு நம்பிக்கை இல்லை. எனவே, எமக்கு சர்வதேச விசாரணையே வேண்டும். இந்த நாட்டின் ஜனாதிபதியே இப்பிரச்சினைக்கு காரணமாக இருந்தவர்.

தமிழர்களின் பிரச்சினையை தீர்த்து வைப்பதாக கூறி இன்று பல வருடங்கள் கடந்துவிட்டன.

ஆனால் இதுவரை ஒரு வித அனுசரணையும் அவர் செய்யவில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக அவர் எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.


மீண்டும் அவர் ஜனாதிபதியாக வந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார் என்பதில் எமக்கு எவ்வித நம்பிக்கையும் இல்லை.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ள ரணில் விக்ரமசிங்க, சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் மீதும் எமக்கு நம்பிக்கை இல்லை. இவர்கள் மூவரும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் எதையும் செய்ய மாட்டார்கள்.

யுத்தம் முடிந்து சுமார் 15 வருடங்கள் கடக்கின்ற போதும் தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வு வழங்காத சிங்கள அரசு, எங்களுக்கு ஒரு சரியான, நிரந்தர தீர்வினை தரும் என்பதில் எவ்வித நம்பிக்கையும் இல்லை.

எனவே, காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் எமக்கு சர்வதேச விசாரணை ஒன்றே தேவை. - என்றனர்.(05)

# வீதியில் தீப்பற்றி எரிந்த வாகனம்



பொரளை, கொட்டா வீதியில் உள்ள ருஹுனுகல மாவத்தையில் வாகனமொன்று புதன்கிழமை இரவு தீப்பிடித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு மாநகர சபையின் இரண்டு தீயணைப்பு வாகனங்கள் தீயை அணைத்துள்ளன. (05)

# அடுத்தடுத்து 4 பேர் இறப்பு தம்புள்ளையில் சம்பவம்

தம்புள்ளை பகுதியில் சட்டவிரோத மதுபானம் அருந்தி நான்கு பேர் உயிரிழந்துள்ளனர் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த சோக சம்பவம் தம் புள்ளை விகாரை சந்தி பகுதியில் பதிவாகியுள்ளது.

இரண்டு நாள்களுக்கு முன்னர் இதே சட்டவிரோத மதுபானத்தை அருந்தி இருவர் உயிரிழந்துள்ளனர் எனவும் புதன்கிழமை அதே மதுபானத்தை அருந்தி இருவர் உயிரிழந்துள்ளனர் எனப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்தவர்களின் பிரேதப் பரிசோதனைக்கு மேலதிகமாக, தடயவியல் அறிக்கைகளை வரவழைத்து அவர்களின் மரணத் திற்கான குறிப்பிட்ட காரணங் களைக்கண்டறியத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்புள்ளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(05)

## ரிமால் புயல் காரணமாக மீன்களின் விலை எகிறல்

ரிமால் புயல் காரணமாக கடற்பிராந்தியங்கள் மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் ஆழ்கடல் வள்ளங்கள் எவையும் மீன்பிடிக்க செல்லவில்லை. இருந்த போதிலும் கரை வலை மீன் வள்ளங்கள் மீன்பிடி நடவடிக்கையில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றன.

அம்பாறை மாவட்டத்தின் பெரிய நீலாவணை, கல்முனை , மருதமுனை, பாண்டிருப்பு, பெரியநீலாவணை, நிந்தவூர் , அட்டாளைச்சேனை, ஒலுவில், அக்கரைப்பற்று, தம்பிலுவில், பொத்துவில் பகுதிகளில் உள்ள மீனவர்கள் மற்றும் கடல்சார் ஊழியர்கள் புயல் தொடர்பில் அவதானமாக செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

பலத்த காற்று மற்றும் கடல் கொந்தளிப்பு தொடர்பில் அண்மைக் காலமாக வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனால் மீன்களின் விலைகள் அதிகரித்துள்ளதுடன், சந்தைகளும் மீன்கள் இன்மையால் மூடி காணப்படுகின்றன. குறித்த மாவட்டத்தின் பெரிய நீலாவணை முதல் பொத்துவில் பகுதி வரையுள்ள கடற்பரப்பு உள்ளிட்ட கடற்பிராந்தியத்தில் மீன்களின் பிடிபாடு பெருமளவில் குறைவடைந்துள்ளது.

இதற்கு காரணம் சடுதியாக ஏற்பட்ட சீரற்ற காலநிலை மற்றும் நிலவு வெளிச்சம் போன்ற காரணத்தால் மீன்களின் பிடிபாடு வெகுவாகக் குறைவடைந்துள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடும் காற்றுக் காரணமாகக் கடல் கொந்தளிப்பு அதிகரித்துக் காணப்படுகின்றமை கடும் வரட்சியுடனான காலநிலை நிலவுகின்றமை ஆகிய காரணங்களே மீன்களின் விலை அதிகரிப்பிற்குக் காரணமெனவும் வியாபாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, ஒரு கிலோ விளைமீன் 1,600 ரூபாவாகவும் பாரை மீன் ஒரு கிலோ 2400 ரூபாவாகவும் இறால் ஒரு கிலோ 1,800 ரூபாவாகவும் கணவாய் ஒரு கிலோ 1,700 ஆகவும் சூடை மீன் ஒரு கிலோ 1,000 ரூபாவாகவும் சுறா மீன் ஒரு கிலோ 2,500 ரூபாவாகவும் வளையா மீன் 1,500 ரூபா ஆகவும் நண்டு ஒரு கிலோ 1,600 ரூபா ஆகவும் தற்போது மீனவர்களால் கடற்பரப்புக்களை அண்டிய பகுதிகளில் வைத்து விற்பனை செய்யப்பட்டுவருவதுடன் இதர சில்லறை மீன் வகைகளின் விலைகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

கல்முனை மாநகரை அண்டிய மருதமுனை, நற்பிட்டிமுனை, பாண்டிருப்பு, கல்முனை, சாய்ந்தமருது பகுதிகளிலுள்ள மீன் சந்தைகளிலும் ஏனைய நிந்தவூர், மாளிகைக்காடு மீன் சந்தைகளிலும் மீன் வரத்துக்கள் மிகவும் குறைவடைந்துள்ளமையால் மீன்களின் விலைகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

கடற்கரையை அண்டிய பகுதிகளில் விற்கப்படும் விலைகளிலும் பார்க்க மூன்று மடங்கு அதிகரிப்பில் மேற்படி சந்தைகளில் மீன்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இப்பகுதியில் கடற் கருவாடுகள் ஆற்றுக்கருவாடுகளுக்கு கிராக்கி நிலவி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.05.2024இல் வெளியிடப்பெற்றது